# இந்தியாவில் விமானசேவை பாதிப்பு; விமானிகள் வேலைநிறுத்தம்

Registered as a News peper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 111
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 20 ரபி;அவ் 16 திங்கட்கிழமை [2-6-69]

**அன்பளிப்பு**

அண்ணா கோப்பி No. 1 பக்கற்
வாங்கும் ஒவ்வொருவருக்கும்
வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய
வீதியில் இன்று (2-6-69) மில்க்வைற்
விளம்பரவானில் கீழ்க்காணும் பொருட்
கள் அன்பளிப்பாக வழங்கப்படும்.

1. அழகான பிளாஸ்டிக் பை
2. அண்ணா பற்பொடி பக்கட்

இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

**அண்ணா இன்டஸ்றி**
இணுவில்.

புதுடில்லி, ஜூன் 1

இந்திய 'எயாலைன்ஸ் விமான' சேவையைச் சேர்ந்த விமானிகள் இன்று அடையாள வேலை நிறுத்தம். செய்ததால் தினசரி நடைபெறும் 22 விமான சேவைகளில் இரண்டு சேவைகள் மாத்திரம் இன்று நடைபெற்றன.

விமானியாகக் கடமையாற்றாத குறைந்த தரத்திலுள்ள ஒருவரை பம்பாய் காரியாலயத்தில் பொறுப்பதிகாரியாக நியமித்ததைத் தொடர்ந்து பம்பாய்-புதுடில்லி விமான சேவையிலுள்ள விமானிகள் திடீர் வேலை நிறுத்தம் செய்தனர். இவர்களின் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக இந்தியன் எயர் லைன்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த சகல விமானிகளும் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

இந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதென ஸ்தாபன நிர்வாகம் தெரிவித்தது. ஆனாலும் வேலை நிறுத்தத்துக்கு ஒரு சமரசத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இந்த வேலை நிறுத்தத்தினால் இந்திய உள்நாட்டு விமான சேவை வெகுவாகப் பாதிக்கப்பட்டு பிரயாணிகளுக்குப் பெரும் கஷ்டம் நேரிட்டது.

# சிங்களமும் பௌத்தமும் முக்கிய பாடங்களாக போதிக்கப்படும்

## பௌத்தபாடசாலைகள் கையளிப்பு வைபவத்தில் தேரோ தகவல்

நல்லூர், திங்கள்

**அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளிலும் சிங்களமும் பௌத்தமும் முக்கிய பாடங்களாகப் போதிக்கப்படுமென்று யாழ்ப்பாணம் நாகவிகாரை பிரதம குரு கடவத்தை நந்தராமநாயக்கதேரோ நேற்றுத் தெரிவித்தார். வடபகுதி பௌத்த பாடசாலைகள் கையளிப்பு வைபவத்தின்போதே அவர் இதனைக் கூறினார்.**

வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளும் நேற்றுக்காலை உத்தியோக பூர்வமாக அரசாங்கம் கையேற்றது.

யாழ்ப்பாணம் நாகவிகாரைப் பிரதம குருவான கடவத்தை நந்தாராமநாயக்க தேரோவும், அகில இலங்கை தமிழ் பௌத்தகாங்கிரஸ் பிரமுகர்களும் இந்தபொறுப்பேற்பு வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மியும் கையேற்றனர்.

### தேசியக்கொடியும் பௌத்தகொடியும்

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் நாகவிகாரையிலிருந்து கடவத்தை நந்தாராமநாயக்கதேரோ, அகில இலங்கை தமிழ் பௌத்த காங்கிரஸ் பிரமுகர் திரு. எம். வைரமுத்து ஆகியோர் [illegible] றில் பொலிஸ் [illegible] டன் அச்சுவேலி விபாசி வித்

### சிங்களமும் பௌத்தமும்

"சிங்களமும் பௌத்தமும் அரசாங்கப் பொறுப்பேற்கும் இந்தபௌத்தபாடசாலைகளில் முக்கிய பாடமாக படிப்பிக்கப்படும். சிங்களம் அரசாங்க மொழியாக இருப்பதால், சிங்களம் இங்கு படிப்பிக்கப்படுவதை யாரும் தடைசெய்ய முடியாது. இந்தப் பாட

# கிராமங்களில் தொழில்நுட்ப கல்வி பயிற்ற வேண்டும்

## வர்த்தக அமைச்சர் கூறுகிறார்

வென்னப்புவ, ஞாயிறு

நாட்டின்வருங்கால கைத்தொழில் அபிவிருத்தியை முன்னிட்டு தொழில் நுட்ப கைத் தொழில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது அத்தியாவசிய மானதாகும். கிராமப்புறங்களில் உள்ள மகாவித்தியாலயங்களில் தொழில் நுட்பகைத் தொழில் கல்விக்கான பகுதிகளை நிறுவினால் அவற்றால் கிராமப்புறமக்கள் பெரும் நன்மையடைவார்கள்.

வென்னப்புவ தொகுதியிலுள்ள கட்டுனேரியா மகா வித்தியாலயத்தில் கைத்தொழில் பிரிவுக்கான கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டிவைத்துப் பேசுகையில் வர்த்தக அமைச்சர் கியூ பர்னாண்டோ மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"இந்த மகா வித்தியாலயம் அண்மையிலே தரம் உயர்த்தப்பட்டாலும் அது துரித முன்னேற்றமடைந்து வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நாட்டு இளைஞர்களைத் தகுந்த முறையில் பயிற்றுவித்தால் இலங்கை ஆசிய நாடுகளிலேயே முன்னணியில் நிற்கும். மாணவர்கள் பரீட்சைக்காகப்படித்துஅரசாங்க உத்தியோகங்கள்தான் வகிக்க வேண்டும் என்ற நினைவோடு கல்வி கற்கக் கூடாது. நாட்டின் நலனுக்காக அதற்குத் தகுந்த கல்வி முறையைப் பின்பற்ற வேண்டும்.

### வள்ளுவர் 2,000 ஆண்டு நிறைவுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

மன்னார் மாந்தைக் காரியாதிகாரி பிரிவினால் நடாத்தப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு நிறைவுவிழா இன்று அடம்பன் கிராம சபைத் திறந்த வெளியரங்கில் ஆரம்பமாகின்றது.

முதலாம் நாளான இன்றைய விழாவுக்கு மன்னார் அரசாங்கஅதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் தலைமை வகிப்பார்.

இன்றைய விழாவில் மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோன், விடத்தல்தீவு மகா வித்தியாலய அதிபர் ஜனாப் எம். அப்துல் காதர், மன்னார்ப்பகுதி பிரதம கல்வி அதிகாரி திரு. வி. நடராசா ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

கலைநிகழ்ச்சிகளில் கவியரங்கு கும்மி, வில்லுப்பாட்டு, வாத்திய இசை ஆகியன இடம்பெறும்.

(கா. நி.)

### இன்று குருபூஜை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திரு. வே. நாகலிங்கம் தலைமையில் இன்று திருஞானசம்பந்தர் குருபூஜை நடைபெறவிருக்கின்றது.

சிவபூஜை, தமிழ்மறை ஓதல், மகேஸ்வர பூஜை ஆகியனவும், சித்தாந்த வித்தகர் திரு. சோமசுந்தரம் செட்டியாரின் சொற்பொழிவும் குருபூஜையில் இடம்பெறும்.

யாழ்ப்பாணம், திங்கள்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை, சரவணை ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோவிலில் இன்று நடைபெறும். சைவப் பெரியார்கள் மாலையில் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள்,

# 'சிங்களவரின் உதவிமூலம் தீண்டாமை ஒழிக்கமுடியாது

## கண்டனக்கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், சனி

தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களிடையேசமூக ஏற்றத்தாழ்வு இல்லையென்று கூறுவது முழுப்பொய். அங்கு பெண்கள் மேலங்கி அணியமுடியாமல் ஆண்கள் முழங்காலுக்கு கீழ் ஆடை அணிய முடியாமல் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இதை தமிழ் மக்கள் உணர்வார்களேயானால் சிங்கள மக்களின் உதவியை நாடியிருக்க மாட்டார்கள். அவர்களின் உதவி மூலம் நாம் சமூக ஏற்றத்தாழ்வை அழித்துவிடலாமென்றுநினைப்பது தவறு அங்குதான் தீண்டாமையும் முரமாக இருந்து வருகிறது. அன்புமூலமே தீண்டாமையை அகற்ற முடியும்.

இவ்வாறு வடபகுதி 3 பௌத்த பாடசாலைகளில் சிங்களம் போதனா மொழியாக மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கூட்டமொன்றில்பேசுகையில் ஆசிரியர் திரு இரத்தினம் கூறினார். அவ்வாயில் நடைபெற்ற இக்கூட்டத்தை இப்பகுதிகளிலுள்ள சிறுபான்மைத் தமிழர்கள் கூட்டியிருந்தனர். யாழ்ப்பாணமாநகரசபை உறுப்பினர் திரு என். ரி. செல்வத்துரைதலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், சிங்களத்தை போதனா மொழியாகுவதை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இது கல்வி அமைச்சருக்கும், பிரதமருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

திரு. என். ரி. செல்லத்துரை பேசுகையில், தமிழர் மத்தியில்பிரிவை ஏற்படுத்தி, இனக்கலவரத்தை தூண்டும் வகையிலேயே இவ்வித முயற்சியில கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது. சிறுபான்மைத் தமிழர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் அல்ல என்று கூறினார்.

# மர்மக்கொலையை துப்புத் துலக்க சென்ற பொலிஸார்

## தவறான தகவலால் ஏமாற்றம்

திருக்கோணமலை, ஞாயிறு

'மர்மக்' கொலையொன்றைத் துப்புத்துலக்குவதற்காக பறந்துசென்ற பொலிஸார் பலத்த ஏமாற்றத்துக்குள்ளானார்கள்.

திருக்கோணமலையிலுள்ள உப்புவெளி என்னுமிடத்தில் 'காதல் ஒழுங்கை' என்ற இடத்தில் பெரிய பை ஒன்றை அவ்வழியே வந்து கொண்டிருந்த இளைஞன் கண்டான். பையின் ஒரு மூலையைத் திறந்ததும் இளைஞன் திடுக்கிட்டான். மனித தலைமயிர் வெளியே நீட்டிக்கொண்டிருந்தது. கொலை எனச் சந்தேகப்பட்ட இளைஞன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றான். நான்கு பொலிஸார் அந்த இளைஞனை ஏற்றிக்கொண்டு 'ஜீப்' வண்டியில் ஸ்தலத்துக்குப் பறந்தனர்.

பரபரப்புடன் பையை மெதுவாகத் திறந்தனர். தலைமயிரை வெளியே எடுத்தனர். வெட்டப்பட்ட தலைமயிர் வந்துகொண்டேயிருந்தது. அந்தப் பை முழுவதும் தலைமயிராகவே இருந்தது. பல நாட்களாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள கட்டுனேரியா மகா வித்தியாலயத்தில் கைத்தொழில் பிரிவுக்கான கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டிவைத்துப் பேசுகையில் வர்த்தக அமைச்சர் கியூ பர்ஞண்டோ மேற்

சைக்காகப்படித்துஅரசாங்க உத்தியோகங்கள்தான் வகிக்க வேண்டும் என்ற நினைவோடு கல்வி கற்கக் கூடாது. நாட்டின் நலனுக்காக அதற்குத் தகுந்த கல்வி முறையைப் பின்பற்ற வேண்டும்.

## கிளிநொச்சி கிணறுகளை ஆழமாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சித் தொகுதியில்ஏற்பட்டுள்ள தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீர் வற்றிப்போயிருக்கும் கிணறுகளை மேலும் தோண்டி தண்ணீர் பெறலாமென கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தெரிவித்த யோசனையைத் தொடர்ந்து பொறியியலாளர்கள்கிளிநொச்சிப்பகுதியிலுள்ள பல இடங்களுக்கும் சென்று கிணறுகளைப் பார்வையிட்டனர். பண்டிதர் இரத்தினமும் இவர்களுடன் சென்று நிலைமையை விளக்கினர்.

சிலகிணறுகளிலும், இரணைமடுக்குளத்திலும் தண்ணீர் வற்றிவிட்டதால், நிலத்துக்குக்கீழ்உள்ள தண்ணீரைப் பெறுவதற்கு தோண்டும்நடவடிக்கையை மேற்கொள்ளும்படி திரு. இரத்தினம் நீர்ப்பாசனத் திணைக்களத் தலைவரையும். காணி நீர்ப்பாசனமந்திரியையும் முன்னர் வற்புறுத்தியிருந்தார்.

இராமநாதபுரம், வட்டக்கச்சி, முரசுமோட்டை, உருத்திரபுரம் ஆகிய பகுதிகளுக்கு பொறியியலாளர்கள் பண்டிதர் இரத்தினத்துடன் சென்று கிணறுகளைப் பார்வையிட்டனர்.

உருத்திரபுரத்தில் முன்னர் அகழ்ந்து எடுக்கப்பட்ட கிணற்றில் 16 அடியிலிருந்து 200 அடிவரை நீர்பெறக் கூடியதாக இருப்பது சுட்டிக் காட்டப்பட்டது.

## அன்று அக்கறைகாட்டாதவர் இன்று காட்டுவது ஏன்?

### கல்விஅமைச்சர் நடவடிக்கை பற்றி திரு. அமிர்தலிங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கல்வி மந்திரி சிறுபான்மைத் தமிழரில் உள்ள அக்கறையினால் பௌத்த பாடசாலைகளை பொறுப்பேற்கவில்லை. தமிழினத்தைப் பிரித்து அழிப்பதற்காகவே இதனை செய்கின்றார். தமிழினம்முழுவதும் இதனைஏகோபித்து எதிர்க்க வேண்டும்.

தமிழரசுக் கட்சி பொது செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று நடந்த சர்வகட்சி மகா நாட்டில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

சில மாதங்களுக்கு முன் சிறுபான்மைத் தமிழர் ஆசிரியர் தூதுகோஷ்டிஒன்றை கல்வி மந்திரியிடம் அழைத்துச் சென்றோம். மாணவர் ஆசிரியர் நியமனம் இடமாற்றம், பயிற்சி கலாசாலை ஆகியவற்றில் சிறுபான்மைத் தமிழருக்கு விசேஷ சலுகை வழங்குபடி தாம் கேட்டபோது கல்வி மந்திரி மறுத்துவிட்டார். சிறிமா அரசாங்கம், சிறுபான்மை தமிழருக்கு விசேஷ சலுகைகள் அளித்தது.

கல்வி மந்திரி தனது தொகுதியில் 13,000 தாழ்த்தப்பட்ட சிங்களவர் இருப்பதாகவும் சிறுபான்மை தமிழருக்கு விசேஷ சலுகையளித்தால், அதனால் பல கஷ்டங்கள் வருமென்றும் கூறினார். இதற்கு சம்மதிக்காத கல்வி மந்திரி இன்று பௌத்த பாடசாலைகளை பொறுப்பேற்பதேன்,

யாழ்ப்பாணம் நாகவிகாரைப் பிரதம குருவான கடவத்தை நந்தாராமநாயக்க தேரோவும், அகிலஇலங்கை தமிழ் பௌத்தகாங்கிரஸ் பிரமுகர்களும்இந்தபொறுப்பேற்பு வைபவத்தில் கலந்துகொண்டனர்.

அச்சுவேலியிலுள்ள பாடசாலையை கோப்பாய் வட்டார கல்விப் பரிசோதகர் திரு வி. சண்முகநாதனும், கரவெட்டிப் பகுதியிலுள்ள பாடசாலையை அப்பகுதிக் கல்விப்பரிசோதகர் திரு. எஸ். மகேஸ்வரஐயரும், அல்வாயிலுள்ள பாடசாலையை பருத்தித்துறைப்பகுதி பரிசோதகர் திரு. எஸ். கந்தசா

ணம் நாகவிகாரையிலிருந்து கடவத்தை நந்தாராமநாயக்கதேரோ, அகிலஇலங்கை தமிழ் பௌத்த காங்கிரஸ் பிரமுகர் திரு. எம். வைரமுத்து ஆகியோர் காரொன்றில் பொலிஸ் பாதுகாப்புடன் அச்சுவேலி விபாசி வித்தியாலயத்துக்குச் சென்றனர். பாடசாலை வர்ணக் கடதாசிகளால் சோடிக்கப்பட்டிருந்தது. பெற்றோர்களும் ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலையில் குழுமியிருந்தனர்.

திரு. எம். வைரமுத்து தேசியக்கொடியையும், பௌத்த கொடியையும் ஏற்றிவைத்தார்.

### 'பன்ஸில்' சொல்லிக் கொடுத்தார்

இதனை அடுத்து, கடவத்தை தேரோ அங்கு படிக்கும் மாணவர்களுக்கு 'பன்ஸில்' சொல்லிக்கொடுத்தார். பாடசாலை கையளிப்பு வைபவம் இதன் பின்னர் நடைபெற்றது. கோப்பாய் வட்டார கல்விப் பரிசோதகர் பாடசாலையைப் பொறுப்பேற்றார். யாழ். நாகவிகாரை பிரதம குரு கடவத்தை நத்தாரமாநாயக்க தேரோ இந்த வைபவத்தில் கலந்துகொண்டு பேசினார். அவர் பேசுகையில் கூறியதாவது:-

நான் பல கட்சியினருக்கும் அழைப்பு அனுப்பினேன். யூ. என். பி. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் காங்கிரசும் கூட்டரசாங்க கட்சிகளும் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் மகாநாடு கூட்டினால் நாங்கள் கலந்து கொள்ள தயாராக இருக்கிறோம்.

பேற்கும்இந்தபௌத்தபாடசாலைகளில் முக்கிய பாடமாக படிப்பிக்கப்படும். சிங்களம் அரசாங்க மொழியாக இருப்பதால், சிங்களம் இங்கு படிப்பிக்கப்படுவதை யாரும் தடைசெய்ய முடியாது. இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதற்காக நாம் கல்வி அமைச்சருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்''

இதன்பின்னர் கரவெட்டி ஸ்ரீகாந்த வித்தியாலயத்தில் பொறுப்பேற்பு வைபவம் நடைபெற்றது. கரவெட்டி பாடசாலை விழாக்கோலம் பூண்டிருந்தது. அகில இலங்கை தமிழ் பௌத்த காங்கிரஸ் தலைவர் திரு. ஜே ஆர். டேவிட் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை ஏற்றி வைத்தபின்னர் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் இணைக் காரியதரிசிகளில் ஒருவரான திரு. வி. கந்தையா பேசினார். அவர் பேசுகையில், ''சிங்களத்தைப் படித்து முன்னேற வேண்டிய காலம் இப்போது வந்துவிட்டது. சிங்கள இனத்திலும் திருமணம் செய்யத் தயாராகிவிட்டோம்'' என்றுகூறினார்.

அல்வாய் ஆனந்த கெமகே வித்தியாலய பொறுப்பேற்பு வைபவத்தின்போது அகில இலங்கைச் சிறுபான்மைத்தமிழர் மகாசபையைச்சேர்ந்த திரு. எஸ். செல்லையா தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இங்கு அரசாங்க பாடசாலையைச் சேர்ந்த இரு உதவி ஆசிரியர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

### சிங்கள ஆசிரியர்கள்

மன்னம்பிற்றிய பாட

(4-ம் பக்கம் பார்க்க)

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை, சரவணை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று நடைபெறும். சைவப் பெரியார்கள் மாலையில் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள்,

'காதல் ஒழுங்கை' என்ற இடத்தில் பெரிய பை ஒன்றை அவ்வழியே வந்துகொண்டிருந்த இளைஞன் கண்டான். பையின் ஒரு மூலையைத் திறந்ததும் இளைஞன் திடுக்கிட்டான். மனி

துக்குப் பறந்தனர்.

பரபரப்புடன் பையை மெதுவாகத் திறந்தனர். தலைமயிரை வெளியே எடுத்தனர். வெட்டப்பட்ட தலைமயிர் வந்துகொண்டேயிருந்தது. அந்தப் பை முழுவதும் தலைமயிராகவே இருந்தது. பல நாட்களாகச் சிகை அலங்கார நிலையமொன்றில் வெட்டப்பட்டிருந்த தலைமயிரை ஒன்றுக்கி அந்தப் பையில் போட்டு, அங்கு யாரோ எறிந்திருக்கிறார்கள் என்ற விஷயம் பொலிஸாருக்குத்தெரியவர நீண்ட நேரம் பிடிக்கவில்லை.

தகவல் கொடுத்த இளைஞன் பொலிஸாரைப் பார்க்க, பொலிஸார் தகவல் கொடுத்த இளைஞரைப் பார்க்க எல்லாருமே ஏமாற்றத்துடன் சிரித்தனர்.

## சிறுமிக்கு ரூ. 2,500 கட்டவேண்டும்

### பலாத்காரவழக்கில் தீர்ப்பு

காலி, திங்கள்

கங்கம பலாத்கார வழக்கில், எதிரி பலாத்கார குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து நீதியரசர் 13 வயதான எச். கே லீலாவதிக்கு 2500 ரூபா மாதத் தவணையில் எதிரி கட்ட வேண்டுமெனத் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு காலி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர்முன்னிலையில விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் ஜி. ஜினதாசா என்பவர், ஹம்பாந்தோட்டையைச் சேர்ந்த 13 வயதான லீலாவதியை பலாத்காரம் செய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

லீலாவதி சாட்சியமளித்தபோது கூறியதாவது: என் வீட்டில் உள்ளவர்கள் வெளியிலேசென்ற சமயம் நான் வீட்டிலிருந்தேன் எதிரி வந்து என்னை பின்பகத்தில் நின்று பிடித்து நிலத்தில விழுத்தி பலாத்காரம் செய்தார்.

பிறவி ஊமையான எச் டபிளயூ. பெனறிஸ் சாட்சியமளித்தார், ஊமைகளின் விசேஷ மொழிபெயர்ப்பாளரான திரு. என். டபிள்யூ. திஸநாயக்கா, சைகைமூலம் தெரிவித்தவற்றை மொழிபெயர்த்தார்.

## அங்குரார்ப்பணம்

சித்தன்கேணி, ஞாயிறு

வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டம். நேற்றுக்காலை யாழ்ப்பாண மாவட்டச் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு. வி. சுப்பையா தலைமையில் சித்தன்கேணி மாதர்-சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: பி. கந்தஞானி, உப-தலைவர்: என். தங்கத்துரை, செயலாளர்: கே. நடராசா, உப-செயலாள : ஆர். கே. சிவஞானம். பொருளாளர்: எம். நடராசா.

ஆறு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## அச்சுவேலி சிறுவன் கொலை

## வளைந்த கத்தி கைப்பற்றப்பட்டது

நல்லூர், திங்கள்

அச்சுவேலிப் பகுதியில் தம்பாலை என்ற இடத்திலுள்ள தாழம் பற்றைக்குள் கோரமாகக் கொலையுண்டு கிடந்த ஒன்பது வயதுச் சிறுவனின் கொலை சம்பந்தமாக வளைந்த கத்தியொன்றைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். இந்தக் கத்தியினாலேயே கொலை செய்யப்பட்டிருக்கலாமெனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

'காட்ஸ்' பக்கற் ஒன்றுக்கும், இந்தக் கொலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலை சம்பந்தமாக இருவரைப் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர். சின்னத்துரை நாகேஸ்வரன் (17 வயது), இராசையா குண்டுமணி (11 வயது) ஆகிய இருவரையும் அச்சுவேலிப் பொலிஸார் கைதுசெய்து பாதுகாப்பில் வைத்துள்ள சிறுவர்களாவர்.

### பிரிவுபசாரம்

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாக கடமையாற்றி இளைப்பாறும் திரு. எஸ் செல்லத்துரைக்கு வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களால் நேற்று பிரிவுபசாரம்க்அளிகப்பட்டது.

### ஈழநாடு 10-வது ஆண்டு நிறைவு விழா

# மரதன்ஓட்டத்துக்கு 'நொதர்ன்இண்டஸ்றீஸ்' கிண்ணம்; உதைபந்தாட்டத்துக்கு 'கே. என். எம்.' கிண்ணம்

## இன்றே விண்ணப்பியுங்கள்! பரிசுகளைப் பெறுங்கள்!

யாழ்ப்பாணம், திங்கள்

''நொர்தன் இண்டஸ்றீஸ்'' ஸ்தாபனத்தார் வழங்கும் பெறுமதி வாய்ந்த வெற்றிக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' ஸ்தாபனத்தார் நடாத்தும் 26மைல் மரதன் ஓட்டப்போட்டியில் கலந்து கொள்ள நீங்கள் விண்ணப்பம் அனுப்பி விட்டீர்களா?

இல்லையானால் இன்றே உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள். இன்னமும் மூன்று தினங்களே இருக்கின்றன.

'ஈழநாடு' 10வது ஆண்டு நிறைவுவிழா இம்மாதம் 12ம் 13ம் 14ம் திகதிகளில் யாழ்ப்பாண நகரில் நடைபெறுகிறது. 14ம் திகதி விழாவின் காலை முதல் நிகழ்ச்சியாக மரதன் ஓட்டம் நடைபெறவிருக்கின்றது.

21 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இப் போட்டியில் கலந்துகொள்ளலாம். விதிகள் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பத்திரிகையில் வெளிவரும் மரதன் ஓட்டத்திற்கான விண்ணப்பப் பத்திரத்துடன் வரும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் 'ஈழநாடு', சிவன்கோவில் மேலை வீதி, த. பெ. எண்: 49, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

போட்டியில் முதலிடம் பெறுபவர்க்கு 'நொதர்ன் இண்டஸ்றீஸ்' ஸ்தாபனத்தார் வழங்கும் நிரந்தரமான வெள்ளிக் கிண்ணம் பரிசாக வழங்கப்படும். இரண்டாவது இடத்தைப் பெறுபவர்க்கும் வெள்ளிக் கிண்ணமே பரிசாக வழங்கப்படுவதோடு ஓடி முடிக்கும் ஒவ்வொருவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

இதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது நேற்றுடன் முடிவடைந்தது. பல்வேறு விளையாட்டுச் சங்கங்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பங்சள் அனுப்பியுள்ளன.

முதலாவது இடத்தைப் பெறும் விளையாட்டுக் கழகத்திற்கு கே. என். எம். மீறுன் சாகிப் ஸ்தாபனத்தார் வழங்கும் வெற்றிக் கிண்ணம் நிரந்தரமாக வழங்கப்படும்.

போட்டிகள் அனைத்தும் இவ்வாரத்திலேயே ஆரம்பமாகவிருக்கின்றன. முழுவிபரங்களுக்கும் தொடர்ந்து 'ஈழநாடு' வாசியுங்கள்.

(கா. நி.)


## திருமண அழைப்பு

மணமகன்:- சிரஞ்சீவி நடராஜமூர்த்தி [இலங்கை மக்கள் வங்கி] ('ஈழநாடு' நிர்வாகஆசிரியர் திரு. கே. பி. ஹரன் தம்பதிகளின் குமாரர்)

மணமகள்:- சௌபாக்கியவதி சாந்தா (புதுக்கோட்டை திறைசேரி ஆபீஸர் திரு. சி. ராமஸ்வாமிஐயர் தம்பதிகளின் புதல்வி)

காலம்:- 4-6-1969 புதன்கிழமை காலை 9-20 முதல் 10-48 வரை

முகூர்த்தம்:- உத்தராட நட்சத்திரம் கூடிய சுபயோகதினமான கடகலக்கினம்.

இடம்:- 3048/1, கீழ் இரண்டாம் தெரு, புதுக்கோட்டை, திருச்சி மாவட்டம், தென் இந்தியா.

அன்பர்கள், நண்பர்கள், உற்றூர், உறவினர் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

நெசவு வேலை செய்து பழகுவதற்கு ஆர்வம் உள்ள பெண்கள் தேவை. பா, நூல் சுற்றிக்கொடுப்பதற்கு நன்கு அனுபவமுள்ள பெண்கள். சிறு பையன்கள் தேவை. நேரில் வரவும் லீயோ ரெக்ஸ்வீவிங் இன்டஸ்றீஸ், 45, ஜும்மா மொஸ் லேன், பாட்டாமேல் மாடி, யாழ்ப்பாணம். 1166

பயிற்சியாளர்கள் தேவை இம்மாதம் 15-ந் திகதிக்கு முன்னர் நேரடித் தொடர்பு கொள்ளவும். கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். தொலைபேசி: 410 1168

### விற்பனைக்கு

கார்:

நல்ல நிலைமையிலுள்ள CV 6000 தொடர்பிலக்கமுள்ள 'பேற்போட்' வான் விற்பனைக்குண்டு. 11, சின்னக்கடை மார்க்கட் ரோட், யாழ்ப்பாணம். 1169

ஆறும் ஏழாம் எட்டாம் வகுப்பு தகுதிப் பரீட்சையின் இரண்டாம் தவணை-மாதிரி வினுக்களும் விடைகளும் ஆங்கிலம் ரூபா 1/- கூடுதலாக வாங்குபவர்களுக்கு கழிவு கொடுக்கப்படும். ஐக்கிய கலாசாலை நெல்லியடி, கரவெட்டி 1170


ராஜா (யாழ்ப்பாணம்) 140வது தினம்
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
ஜெய்சங்கர் - விஜயா நடித்த
பெண்ணே நீ வாழ்க

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 10-30மணி
எம்.ஜி.ஆர். - சாவித்திரி நடித்த
பரிசு


சர்வகட்சி மகாநாடு

# 'சிங்களத்தை ஏற்ருல் தென்னிலங்கை தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படும்"

— வட்டுக்கோட்டை எம். பி.

யாழ்ப்பாணம், திங்கள்

'ஆங்கிலத்தை போதனுமொழியாக கற்றதனுல் தமிழினம அழிந்துவிடவில்லையே என்று சிலர் கூறுகிருர்கள். அது வேறுவிஷயம். சிங்களத்தைபோதனு மொழியாக நாம் ஏற்றுக்கொண்டால் ஒரு தலைமுறையில் தமிழர்கள் சிங்களவர்களாக மாறக்கூடியநிலை ஏற்பட்டுவிடும்.'

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த சர்வ கட்சி மகாநாட்டில், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ். மேயர் திரு. எஸ். நாகராசா தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: தமிழர் சரித்திரத்தில் எத்தனையோ சிக்கல்கள் தோன்றியுள்ளன. இன்று எழுந்துள்ள சிக்கல், தமிழ் இனத்தின் ஆணிவேரையே அறுத்துவிடக்கூடிய பெரிய சிக்கலாகும். தமிழ் மொழியை அரசாங்கமொழியாக வாதாடி, போராடி நாளடைவில் பெற்றுக் கொள்ளலாம். ஆனுல் போதனு மொழியில் மாற்றம் ஏற்படுமானுல் தமிழினம் வாழமுடியாத நிலைமை ஏற்படும்.

பெற்றோர் விருப்பப்படி இங்கு சிங்களம் போதனு மொழியானுல் தென்னிலங்கையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகள் எல்லாம் மூடக்கூடிய நிலைமை ஏற்படும். தமிழினத்தின் ஏகோபித்த


வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன் - காஞ்சனு நடித்த
பாமா விஜயம்

REGAL JAFFNA
Daily 4 Shows
June Guiliano
Evelyn Stewart
in
ADIOS GRINGO


# 'தேசிய அரசாங்க ஆட்சியில் 100 தமிழ் பாடசாலைகள் மூடப்பட்டன'

— திரு. நேசையா

எதிர்ப்பு காரணமாகத்தான் அரசாங்கம் சிங்களத்தை போதனுமொழியாக்க தயங்குகிறது.

சட்டப்படி 15 தமிழ்ப் பிள்ளைகள் ஒரு பாடசாலையிலிருந்தால், தமிழ்போதனு மொழி என்பதுதான் இன்றுள்ள சட்டம். பெற்றோர்கள் விரும்பினுல் இதில்மாற்றம் செய்வதற்கு சட்டத்தில் வகைசெய்யப்பட்டிருக்கிறது. இதன் நோக்கமென்னவென்ருல், எங்காவது இரண்டு மூன்று தமிழ்க் குடும்பங்கள் வசிக்கும் இடத்தில் அவர்களின் பிள்ளைகளுக்கு சிங்களத்தை பெற்ருர்விருப்பப்படி, போதனு மொழியாக்குவதற்குத் தான் இதேபோல், இரண்டு மூன்று சிங்கள குடும்பங்கள் மட்டும் வசிக்கும் இடத்தில் அவர்கள் பிள்ளைகளுக்கு, சட்டப்படி, தமிழ் மொழியை போதனு மொழியாக்கலாம். ஆனுல் நூற்றுக்குநூறு வீதம் தமிழ்மக்கள் வாழும் பகுதியில் சிங்களத்தை போதனு மொழியாக்குவதெப்படி? சட்டத்தை பயன்படுத்தி பெற்ருேர் விருப்பம் என்ற போர்வையில், சிங்களத்தை திணிப்பதுதான் கல்விமந்திரியின் திட்டம். இதற்கு நாம் அனுமதித்தால், இனக்கொலை, இன அழிவு ஏற்படுவது நிச்சயம். தற்கொலை செய்வதற்கு நாமே நஞ்சு குடித்தவர்களாவோம்.

### தமிழினம் தீர்க்கவேண்டிய பிரச்னை

இதுபற்றி பலர் போதியளவு சிந்திக்கிருர்களில்லை. இம் மகாநாட்டில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தமிழ் இளைஞர் இயக்கம், மக்கள் முன்னேற்ற மன்றம், ஆசிரியர் சங்கங்கள், கலந்துள்ளன. இப்பிரச்னைடட்லி, இரியகொல்லை, தீர்க்கவேண்

முதலில் எமது சமுதாயத்திலுள்ள பலஹீனம் என்னவென்பதை அறியவேண்டும். பலஹீனம் ஏற்படக் காரணம் எங்கள் மத்தியில் ஒற்றுமை இல்லாததுதான். நாம் ஒன்று சொன்னுல் அதை எதிர்க்கச் சிலர் இருக்கிருர்கள். அதனுல்தான் இவ்விஷயத்தில முடிவு எடுக்க எல்லோரையும்வரும்படி அழைத்தேன்.

மூன்று பாடசாலைகளிலும் சிங்களத்தைப் போதனு மொழியக்கும்படி பெற்றோரிடம் ஒரு பத்திரத்தில் கையெழுத்து வாங்கியிருக்கிருர்கள் அந்தப் பத்திரத்தை நாங்கள் பார்த்தோம். அந்தப்பத்திரம்கொழும்பில்சிங்கள அச்சகத்தில் அச்சிடப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே இது ஒரு திட்டமிட்ட சதி என்பது தெரிகிறது.

இது சமய சம்பந்தமான பிரச்னையல்ல. சமுதாயம் முழுவதையும் பொறுத்த பிரச்னை. இவ்விஷயத்தில் நாங்கள்இன்னும் கவலையீனமாக இருந்தால் எங்கள்பிள்ளைகளை நஞ்சூட்டிக்கொன்றவர்களாவோம். தவருன பாதையில் அழைத்துச்செல்லப்படும் மக்களுக்கு நாம் வழிகாட்டவேண்டும். பெரும்பான்மை சமுகம் அவர்களுக்கு நம்பிக்கையூட்டவேண்டும்.

காலியில் உள்ள பிக்கு ஒருவர், வடபகுதியில் உள்ள 5 லட்சம் சிறுபான்மை தமிழர்களும் பௌத்தர்களாகி விடுவார்கள்என்றுகூறியிருப்பதால், ஆலயங்களைத் திறந்துவிடவேண்டிய அவசியம் இனிமேல் இருக்காது என ஒரு சைவப்பெரியார் கூறினுராம். இப்படியானபொறுப்புணர்ச்சியற்ற பேச்சுக்களாலும் செயல்களாலும் தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மதமாற்றம், இனமாற்றம்

முன் இங்குள்ள தனிப்பட்ட பாடசாலைகளில் ஹரிஜன பிள்ளைகளுக்கு இடமளிக்கப்படவில்லை. உத்தியோகஸ்தியத்திலும் ஹரிஜன மக்கள புறக்கணிக்கப் பட்டனர். இப்படியான [illegible] தொல்லைகளை [illegible] யாத காரணத்தால்தான் அவர்கள் [illegible] த்தில் சேரமுன்வந்தார்கள். [illegible] பாதிரிமார்களின் கல்லூரிகளில் [illegible] மாறி ஆங்கிலத்தை போதனு மொழியை ஏற்றவர்கள் தான் இன்று பெரும் கல்விமான்களாகவும் அதிகாரிகளாகவும் செல்வந்தர்களாவும் இருக்கிருர்கள் பொருளாதார [illegible] வித்துறைகளில் பின்தங்கிய ஹரிஜன மக்கள் மதம் மாறி முன்னேற முற்பட்டால் அதில் என்ன தவறு இருக்கிறது. இங்குள்ள பிரபல கல்லூரிகளில் ஹரிஜன பிள்ளைகளுக்கு உபகாரச் சம்பளம் கிடைத்ததா? தமிழர் கையில் கிறிஸ்தவ பாடசாலைகள் இருந்த போது ஹரிஜன பிள்ளைகளுக்கு இடம்கிடைக்கவில்லை இந்த நிலைமையில் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களத்தை போதனு மொழியாக்கும்படி கூறுவதில் என்னதவறு இருக்கிறது. பெரும்பான்மை தமிழர் மனது வைத்தால் பிரச்னை தீராதா?

பெரும்பான்மை தமிழர் இதுவரை காலமும் சிங்களவரிடம் மன்டியிட்டு பெற வேண்டியதை பெற்றுக் கொண்டார்கள். இன்று சிறுபான்மை தமிழர்கள் சிங்களம்வரிட மண்டியிடுவதில் தவறென்ன எங்களை இன்னும் பழைய நிலையில் இருக்கும்படிவிரும்புகிருர்கள். பெரும்பான்மை தமிழர் இதற்கு ஒரு முடிவுகாணுவிடில் சிறுபான்மைத்தமிழர் சிங்களத்தில் படிப்பதை எந்த சக்

பேசும்போது, தோட்டப் பாடசாலைகளை எடுகக முன்வராத அரசாங்கம், இந்த மூன்று பாடசாலைகளைப் பொறுப்பேற்பதில் சூழ்ச்சியிருக்கிறதென்பது தெரிகிறதென்று கூறினுர்.

(4ம் பக்கம் பார்க்க)

## "கல்வியோடு விளையாட்டும் அவசியம்"

கோப்பாய், ஞாயிறு

"இக்காலத்திலே வேலையில்லாப் பிரச்னை வாலிபர்கள் மத்தியிலே பெருமளவில் பரவி வருகின்றது. இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு கல்வியோடு விளையாட்டுத்துறையும் அவசியமாகின்றது. எனவே விளையாட்டுத்துறைமுன்னேற்றத்தால்கல்வியோடு வேலைவாய்புக்கும் இடமுண்டு"

மேற்கண்டவாறு கட்டாபிராய் கலைமணி சனசமூக நிலையத்தின் 20ம் ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கோப்பாய் கிராமசபைத்தலைவர் திரு. தி. பரமானந்தராசப் கூறினுர்.

அவர்மேலும் பேசுகையில் "நம் நாட்டில் பொருளாதர வளத்தைமேம்படச் செய்வதற்கான சகல முயற்சிகளையும் விவசாயப் பெருமக்கள் கையாளவேண்டும். ஒரு விவசாயியின் கையிலேதான் நாட்டின் பொருளாதாரம் தங்கியுள்ள தென்பதை நாட்டு மக்கள் நன்கு சிந்திக்கவேண்டும்."

இவ்வைபவத்தில் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ருேக்கு திரு. எஸ். தில்லைராஜா பிரதம விருந்தினராகக் கலந்து பரிசில்களை வழங்கினுர்,

## கரபந்தாட்டம்

சித்தன்கேணி, ஞாயிறு

சித்தன்கேணி கலைநகர் விவேகானந்தா விளையாட்டுக் கழக 'ஏ' 'பி' பிரிவுகளுக்கும் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக 'ஏ' 'பி' பிரிவுகளுக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான

# யாழ். உதைபந்தாட்டசுற்றுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினுல், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின், 'பி' பிரிவில் யாழ்ப்பாணம் 'பொலிஸ்' உதைபந்தாட்டக் கோஷ்டியும் 'வைக்கிங்ஸ்' விளையாட்டுக் கோஷ்டியும் போட்டியிட்டன.

### 'வைக்கிங்ஸ்' வெற்றி

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை "வைக்கிங்ஸ்" கோஷ்டியினர்கோல்களைப்போட்டவண்ணமே இருந்தனர். இடைவேளையின் போது இக்கோஷ்டி 3-0 கோல்களைப் பெற்றிருந்தது. இடைவேளையின் பின்னும் 'வைக்கிங்ஸ்' கோஷ்டி மேலும் 4 கோல்களைப் போட்டு பொலிஸ் கோஷ்டியை 7-0 கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. எம். டி. தம்பிராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### சமமான முடிவு

"புனிதவளன்" விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்கும், குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற காரசாரமான போட்டி சமமாக முடிவுற்றது. இடைவேளையின் போது, குருநகர் விளையாட்டுக் கோஷ்டி ஒரு கோலைப் பெற்றிருந்தபோதும் இடைவேளையின் பின் புனிதவளன் கோஷ்டி மிக வேகமாக விளையாடி ஒரு கோலைப் போட்டது. இக்கோஷ்டி மேலும் கோல்கள் போடும் ஒரு சில சந்தர்ப்பங்களை நழுவவிட்டதினுல், ஆட்டம் (1-1)சரி சமமாக முடிவுற்றது. இப்போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### வல்வை புளூஸ் வெற்றி

'பி' பிரிவில் "வல்வெட்டித்துறை புளூஸ்" விளையாட்டுக் கழகத்திற்கும், 'யாழ். றேஞ்சஸ்' விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெறவிருந்த போட்டியில் "யாழ், றேஞ்சஸ்" விளையாட்டுக்கழகம் போட்டியில் கலந்து கொள்ள வராததினுல் மத்தியஸ்தர் "வல்வெட்டித்துறை புளூஸ்" விளையாட்டுக்கழகத்திற்கு வெற்றி யெனத் தீர்ப்பளித்தார்.

### சென். அன்ரனிஸ் வெற்றி

'ஏ' பிரிவில் யாழ்ப்பாண

(6ம் கலம் பார்க்க)

## 'ஈழநாடு'

## செய்தி தலைப்புப் போட்டி — [6]

சென்ற வாரம் நாம் கொடுத்த கற்பனைச் செய்தியில் வந்த 'வேதாளபுரம்', 'பாதாள அறை' என்ற வார்த்தைகளை வைத்து அநேக நேயர்கள் தலைப்பு எழுதியதில் ஆச்சரியமில்லை. இச் சொற்களுடன் அமையும் 'கேதாரநாதனை' எவரும் கவனித்ததாக தெரியவில்லை.

**பரிசுபெறும் விடை:**

**'வேதாளபுரத்தில் பாதாள வேட்டை'**

எழுதியவர்: மு. செபஸ்தியாம்பிள்ளை, 19/4, இரண்டாம் குறுக்கு வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்.

**பாராட்டுக்குரிய விடைகள்:**

பின்வரும் விடைகளும் அவற்றைஎழுதியவர்களும் போட்டிக்குழுவின் பாராட்டைப்பெறுகின்றனர். 'வேதாளபுரத்தில் பாதாள அறைகள்' (திருமதி பி. நவமலர், 82, திருமலைவீதி, மட்டக்களப்பு), 'வேதாளபுரத்தில் பாதாள பைரவி' (சி. ரவீந்திரநாதன், வதிரி, கரவெட்டி), மாயமாளிகையில் மர்ம மனிதர்கள்' (செல்வன் இராஜேந்திரன், அம்மன் வீதி, திருநெல்வேலி), 'வேதாளபுரத்து பாதாளச் சுரங்கம்' (இரா. ஜெயசந்திரன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 10-30 மணி
எம். ஜி. ஆர். - சாவித்திரி
நடித்த
பரிசு

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா. போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் — விஜயா
நடித்த
இதயக்கமலம்

REGAL JAFFNA
Daily 4 Shows
June Guiliano
Evelyn Stewart
in
ADIOS GRINGO
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 6-30, & 10-00 P.M.
LAMBOO
IN
HONG KONG
(Hindi)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
உயிரா மானமா

4-வது வெற்றி வாரமாக
காட்சியளிக்கின்றது
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
அசோகன் - கீதாஞ்சலி
நடித்த
அதே கண்கள்

கிங்ஸ்லி (கொழும்பு)
கமலன் (ஜிந்துப்பிட்டி)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
விஜயா (மட்டுநகர்)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
காண்பிக்கப்படுகின்றது!
(ஜேம்ஸ்பொண்ட்) ஜெய்சங்கர் - (ஆடலழகி) ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்து
வி. ஸ்ரீநிவாசனின் டைரக்ஷனில்
உருவாகி வெளிவந்துள்ள
மகோன்னத சித்திரம்
பொம்மலாட்டம்
திரைக்கதை வசனம் சோ.
இசையமைப்பு வி. குமார்


எவு சிந்திக்கிருர்களில்லை. இம் மகாநாட்டில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தமிழ் இளைஞர் இயக்கம், மக்கள் முன்னேற்ற மன்றம், ஆசிரியர் சங்கங்கள், கலந்துள்ளன. இப்பிரச்னைடட்லி, இரியகொல்லை, தீர்க்கவேண்டிய பிரச்னையல்ல. தமிழினம் தீர்க்கவேண்டிய பிரச்னை. நாம் இப்பிரச்னையை தீர்க்கமுடிவு செய்தால், கல்வி மந்திரியின் சதியை முறியடிக்கலாம். இம் மகாநாட்டிற்கு சிலர் சமுகமளிக்காதது வருத்தமாகவிருக்கிறது. நான் அழைத்தபடியால் சிலசமயம் அவர்கள் வராமலிருக்கலாம். இதுபோன்றஇன்னொரு மகாநாட்டை அவர்கள் கூட்டட்டும். நாங்கள் அதில் கலந்துகொள்வோம். ஆர்குற்றியும் அரிசியாகட்டும். பிரச்னை தீர்க்கப்படவேண்டும். அதுதான் நாம் எதிர்பார்ப்பது. நாங்கள் தான் இதற்கு தீர்வுகாண வேண்டும் என்று கூறவில்லை. எல்லோரும் சேர்ந்துதீர்வு காணவேண்டும்.

நதுவிடவேண்டிய அவசியம் இனிமேல் இருக்காது என ஒரு சைவப்பெரியார் கூறினராம். இப்படியானபொறுப்புணர்ச்சியற்ற பேச்சுக்களாலும் செயல்களாலும் தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மதமாற்றம், இனமாற்றம் மூலம் விமோசனம் பெறலாமென சிறுபான்மை மக்கள் எண்ணுவது தவறு. உயிர் போன்ற இப்பிரச்னைக்குஉடனடியாகத்தீர்வுகாண வேண்டும்.

யாழ். பெற்றோர் சங்கத் தலைவர் திரு கு. நேசையா கூறியதாவது: 56ல் ஆரம்பமான தமிழர் எதிர்ப்பு பிரச்னை இன்று முழுஉருவம் எடுத்திருக்கிறது. ஹிட்லருக்கு சரித்திராசிரியர்களும் பத்திரிகையாளர்களும் உதவியாக இருந்ததுபோல் இன்று சிங்களவருக்கு சில ஆங்கிலப்பத்திரிகைகள் உதவியாக இருந்து தமிழன் சரித்திரத்தை மாற்றி எழுதி வருகின்றன. இதனுல் பெரும் ஆபத்து உண்டு

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் தென்னிலங்கையில் சுமார் 100 தமிழ்ப்பாடசாலைகளும், தமிழ்ப்பிரிவுகளும் மூடப்பட்டுவிட்டன. அங்குள்ள பிள்ளைகள் வேறுவழியின்றி சிங்களப்பிரிவில் படித்துவருகின்றனர். நாம் இங்கு சிங்களத்தைப் போதனுமொழியாக ஏற்றுக்கொண்டால் தென்னிலங்கையில் உள்ள மற்றும் தமிழ்ப்பாடசாலைகளும் சீக்கிரத்தில் மூடப்படும்.

## சமுதாயப்போராட்டம்

மகாத்மாகாந்தி சுதந்திரப் போராட்டத்தோடு' சமுதாயப் போராட்டமும் நடத்திவந்தார். இதேபோல் இங்கும்நாம், சமுதாயப் போராட்டம் நடத்தவேண்டும். தமிழர் சரித்திரம், சகலமக்களின் கல்விப்பிரச்னைகள் கொண்ட ஒரு நூலை நாம் மும்மொழியிலும், அடுத்த வருடம் வெளியிட வேண்டும்.

## மதம்மாறக் காரணம்

சிறுபான்மை ஐக்கிய முன்னணி தலைவர் திரு. பி. கதிரவேலு கூறியதாவது:- இந்தியாவில் இருந்து இங்கு வரும் பெரியார்கள் காந்தி குன்றக் குடியடிகள் போன்றவர்கள் இங்கு பெரும்பான்மை சமுகத்தவர் வீட்டில்தான் தங்கினர்கள். அவர்களுக்கு எங்கள் பிரச்னைகளை பெருமான்மை சமுகத்தவர் எடுத்துக் கூறுவதில்லை. மகாத்மா காந்தி அத்திவாரக் கல் நாட்டி ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் கல்லூரியில் கூட ஹரிசன பிள்ளைகளுக்கு முன்னர் இடமளிக்கப்படவில்லை அரசாங்கம் பொறுப்பேற்கு

பான்மை தமிழர்கள் சிங்களம்வரிட மண்டியிடுவதில் தவறென்ன எங்களை இன்னும் பழைய நிலையில் இருக்கும் படிவிரும்புகிறர்கள். பெரும்பான்மை தமிழர் இதற்கு ஒரு முடிவுகாணுவிடில் சிறுபான்மைத்தமிழர் சிங்களத்தில் படிப்பதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

வடபகுதியில் பல இடங்களில் தனிப்பட்ட கல்லூரிகளில் சிங்களம் போதிக்கப்படுகிறது. இந்தத் தனிப்பட்ட கல்லூரிகளில் ஒன்றைக்கூட சிறுபான்மைத் தமிழர் நடத்தவில்லை. பெரும்பான்மைத்தமிழர் தான் சொந்த லாபம் கருதி நடத்துகிருர்கள். இவற்றை தடுக்க முன்வராதவர்கள் அரசாங்கம் இலவசமாக சிங்களத்தைத்தமது பிள்ளைகளுக்கு போதிக்க முன்வரும்போது ஏன் தடுக்க வேண்டும்.

## தனிப்பட்ட சுதந்திரம்

மேயர் திரு. எஸ். நாகராசா கூறியதாவது:

மதமாற்றம் தனிப்பட்ட விருப்பு. சிங்களம் படிப்பது அவர்கள் சுதந்திரம். ஆனுல் திட்டமிட்டுத்தமிழரைச்சிங்களவராக மாற்றுவதைத் தான் எதிர்க்கிறேம். தமிழரும் சிங்களவரும் இந்நாட்டில் சமானமாக வாழ வேண்டும். சமீபகாலமாக அரசாங்கம் தமிழை இன ஒழிப்பு செய்ய பல திட்டங்களை வகுத்தது. அத்திட்டத்தில் ஒன்றுதான் இது.

## ஆலயப் பிரவேசமும் எம். பி.க்களும்

ஆசிரியர் க. ஐயம்பிள்ளை கூறியதாவது: சிறுபான்மைத் தமிழர் சிங்களம் படிக்கவேண்டிய நிலைக்கு யார் காரணம்? சிங்களம் படித்துவிட்டால் சிங்களவராகிவிடுவோமா? சிங்களத்தில் பல நூல்களைத் தமிழர்கள் எழுதியிருக்கிருர்கள். அவர்களைத் தமிழரல்ல என்று கூறமுடியுமா?

ஆலயப் பிரவேச இயக்கத்தை, சிறுபான்மைத் தமிழர்கள் முன்னின்று நடத்தி வெற்றி காணமுடியாது. ஒவ்வொரு தொகுதியிலும் எம். பி.க்கள் தலைமைதாங்கி ஆலயப்பிரவேச இயக்கம் நடத்தவேண்டும். அப்படியானுல் தடைசெய்ய யாரும் முன்வரமாட்டார்கள். சிறுபான்மைத் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் இதில் கலந்து கொள்வார்கள்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசும்போது, பிரிவினையில் சமத்துவத்தை நிலைநாட்ட முடியாதென்றும், தீண்டாமையை ஒழிக்காமல் நமது உரிமைகளைப் பெறமுடியாதென்றும் கூறினர்.

இந்து மாமன்ற ஆலயப் பிரவேசக் குழுச் செயலாளர் திரு. எம். பொன்னையா

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 2—6—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை. 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச் சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-30 ஆங்கில வகுப்பு, 4-35 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7 03 புல்லாங்குழலிசை, 7-35 பேச்சு, 7-45 நேயர் கடிதங்கள், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, நேயர்கேட்டவை 10-30 செய்திச்சுருக்கம்.

சித்தன்கேணி, ஞாயிறு

சித்தன்கேணி கலைநகர் விவேகானந்தா விளையாட்டுக் கழக 'ஏ' 'பி' பிரிவுகளுக்கும் தொல்புரம் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக 'ஏ' 'பி' பிரிவுகளுக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் கலைநகர் விவேகானந்தா விளையாட்டுக் கழகம் தொல்புரம் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை இரண்டு ஆட்டங்களிலும், இரு பிரிவுகளையும் வெற்றியீட்டியது.

வட்டூர் சிவன்கோவில் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ந. சொக்கலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

(8-ம் கலத் தொடர்ச்சி)

கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்திற்கும், பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்றகடும்மோதலில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் ஈற்றில் வெற்றி பெற்றது இடைவேளைக்கு முன்னதாகவே சென். அன்ரனிஸ் கோஷ்டி ஒருகோலைப் போட்டது. இதன் பின் இக்கோஷ்டி பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டு, ஆட்டமுடிவில் 1-0 கோலால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. கணேசலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சமமான முடிவு

'பி' பிரிவில், பாஷையூர் ''சென். அன்ரனிஸ்'' விளையாட்டுக் கழகமும், ''யுத்கவுன்சிஸ்'' விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டியில் இருகோட்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடித் தலா 3-3 கோல்களைப் பெற்றதினுல் ஆட்டம் சரிசமமாக முடிவுற்றது. இப்போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## 'புனிதவளன்' வெற்றி

'புதிதவளன்' விளையாட்டுக் கழகத்திற்கும், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த 'ஏ' பிரிவுப் போட்டியில் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் போட்டியிடவராததினுல் மத்தியஸ்தர் புனிதவளன் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றியெனத் தீர்ப்பளித்தார். இப்போட்டிக்கு திரு. தேவபாலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இப் போட்டிகள் யாவும் கோட்டை மைதாவத்தில் நடைபெற்றன.

(தே. நி)

## பாராட்டுக்குரிய விடைகள்:

பின்வரும் விடைகளும் அவற்றைஎழுதியவர்களும் போட்டிக்குழுவின் பாராட்டைப்பெறுகின்றனர். 'வேதாளபுரத்தில் பாதாள அறைகள்' (திருமதி பி. நவமலர், 82, திருமலைவீதி, மட்டக்களப்பு), 'வேதாளபுரத்தில் பாதாள பைரவி' (சி. ரவீந்திரநாதன், வதிரி, கரவெட்டி), மாயமாளிகையில் மர்ம மனிதர்கள்' (செல்வன் இராஜேந்திரன், அம்மன் வீதி, திருநெல்வேலி), 'வேதாளபுரத்து பாதாளச் சுரங்கம்' (இரா. ஜெயசந்திரன், 'தமிழகம்' மானிப்பாய்), 'வேதாளபுரத்து பாதாள மர்மம்' (செ. சந்தனராசா, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி).

## இன்றைய போட்டி:

பின்தரப்படும் கற்பனைச் செய்திக்கு அழகான கவர்ச்சியான, கூடியவரை சுருக்கமான ஒரு தலைப்பு கொடுங்கள் பார்ப்போம்.

'வவனிக்குளத்திலிருந்து காட்டுக்குள் வேட்டையாடச்சென்ற மூன்றுபேரைக் காணவில்லை. ஐந்து நாட்களுக்கு முன்பு துப்பாக்கிகளுடன் புறப்பட்ட இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி பலவிதமான ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன. அவர்கள் பசிபட்டினியால் மாண்டிருக்ககூடுமென்றும், வனவிலங்குகளுக்கு இரையாகியிருக்கலாம் என்றும், எதிரிகளால் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்றும் கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. திரும்பி வர வழி தெரியாமல் கானகத்தில் அலைந்து திரிகிருர்களோ என்றும் சிலர் சந்தேகிக்கின்றனர். நேற்று காலை இவர்களை தேடிச் சென்ற ஒரு பொலிஸ் தேடுதல் கோஷ்டி ஒரு துப்பாக்கியையும், துவாயையும் காட்டில் கண்டு எடுத்து வந்திருக்கிறது. ஆட்களை காணவில்லை. இன்று மாலை பொலிஸ் நாய்களின் உதவியுடன் மீண்டும் தேடுதல் நடக்கப் போகிறது.'

## நிபந்தனைகள்:

விடைகளைக் கீழ்க்காணும் கூப்பனிலேயே தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். விடைகள் யாவும் 5-6-69க்கு முன் எமக்கு வந்து சேரவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் எழுதி ஒரே உறையில் வைத்து அனுப்பலாம். அனுப்பவேண்டிய விலாசம்: **செய்தித் தலைப்புப் போட்டி (6), 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டிசம்பந்தமான எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ளவேண்டாம். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது. மிகச் சிறந்த விடைக்கு ரூபா ஐந்து (ரூ 5/-) பரிசுப் பணமாக வழங்கப்படும்.

'ஈழநாடு'
செய்திதலைப்புப் போட்டி-(6)

விடை : ..............................

பெயர் : ..............................

விலாசம் : ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - பாகிஸ்தான் உறவில் சோவியத் பிரதமர் ஆர்வம்

## யாஹ்யாகான்-கொஸிஜின் பேச்சுவார்த்தை

ராவல்பிண்டி, ஜூன் 1

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த சோவியத் பிரதமர் திரு அலெக்ஸி கொஸிஜின் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யா கானுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் பகைமையுணர்ச்சி நீக்கப்படவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறியதாகத் தெரிகிறது.

இந்திய ஜனதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசேனின் மரணச்சடங்கில் கலந்துகொள்வதற்கு சமீபத்தில் இந்தியா வந்திருந்த திரு கொஸிஜின், இந்தியப் பிரதமருடனும் இதர தலைவர்களுடனும் இந்திய-பாகிஸ்தான் உறவுநிலை பற்றியும் தாஷ்கண்ட் ஒப்பந்த அமுல் பற்றியும் ஆராய்ந்தனர்.

நேற்று முன்தினம் ராவல்பிண்டியில் பாகிஸ்தான் அதிபருடன் பேசிய திரு. கொஸிஜின், காஷ்மீர் பிரச்னைக்கொரு சுமுகமான தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாகவும் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் 1965ம் ஆண்டில் நிறுத்தப்பட்ட வர்த்தக, விமான, தந்தித் தொடர்புகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறியிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

1965-ம் ஆண்டில் சோவியத் பிரதமரின் முயற்சியினல் உருவாக்கப்பட்ட தாஷ்கண்ட் பிரகடனத்தை அமுல்செய்வதற்கும் இரு நாடுகளுக்கிடையிலும் சீரான உறவு ஏற்படுவதற்கும் சோவியத்பிரதமர் மிக ஆவல் கொண்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### மௌலூதும் சிறுக் கதாப்பிரசங்கமும்

யாழ்ப்பாணம், திங்கள்

சென்ற வியாழக்கிழமை புதுப் பள்ளிவாசல் பந்தலில் இரவு 9 மணியளவில் கலீபா எம். ஏ. சாஹீர் கமீதும் அவர்களது குழுவினர்களும் ஒன்று சேர்ந்து பெருமானாரின் வாழ்க்கைச் சரித்திரம் பொதிந்துள்ள மௌலூத் சரீபை அழகாக ஓதினர்.

வெள்ளிக்கிழமை இரவு ஜனப் எம். ஏ. நூர் முகமது, ஜனப் எம். அபூபக்கர் ஆகிய இரு புலவர்களும் சிறுப் புராணத்தில் இருந்து பெருமானார் பிறந்த பொன் சரித்திரத்தைக் கதாபிரசங்க முறையில் சிறப்பாக நிகழ்த்தினர். (மு. நி)

# சீன - சோவியத் தலைவர்கள் நேரடிப்பேச்சு நடத்தவேண்டும்

## கொள்கை, எல்லைப் பிரச்னைகளுக்கு தீர்வுகாண ருமேனியாவின் யோசனை

புச்சாரெஸ்ட், ஜூன் 1

சோவியத் யூனியனுக்கும் நவசீனவுக்குமிடையேயுள்ள கொள்கை வேறுபாடுகளுக்கும் எல்லைத் தகராறுகளுக்கும் தீர்வு காண்பதற்கு இரு நாடுகளின் தலைவர்களும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று ருமேனியா யோசனை தெரிவித்திருக்கிறது

அல்பேனியா, சீன உட்பட சகல சோஷலிஸ நாடுகளுடனும் நட்பு, ஒத்துழைப்பு, கூட்டுறவு ஆகிய கொள்கையையே ருமேனியா கடைப்பிடிக்கும் என்று ருமேனியா வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறது.

மாஸ்கோவில் விரைவில் நடைபெறவிருக்கும் கம்யூனிஸ்ட் நாடுகளின் உச்சி மகாநாட்டில் ருமேனியா எந்தவிதமான போக்கைக் கடைப்பிடிக்கும் என்பதை மறைமுகமாகத் தெரிவிக்கும் நோக்குடன்தான் இந்தப் புதிய கொள்கை விளக்கத்தை ருமேனியா வெளியிட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

### 'பாதுகாக்க வேண்டும்'

அராலி, ஞாயிறு

''இக்காலச் சந்ததியாரின் தேவைக்காக எமது மூதாதையர் பலா, மா, புளி, பனை போன்ற மரங்களை நாட்டி வைத்துச் சென்றுர்கள். நாம் வீடுகள் கட்டவும் விறகுக்கும் பல மரங்களை வெட்டி வீழ்த்தி வருகிறோம். இந்நிலை நீடிக்குமானல் யாழ். குடாநாட்டின் நிலவளம் குன்றுவதோடு நம்பிற் சந்ததியினருக்கும் தேவையான மரப் பொருட்கள்இல்லாதுசெய்து விடுவோம். அத்தோடு மரங்கள் மழையை பெய்விப்பதற்கும், பெய்த நீரை நிலத்துள் தேக்கி வைப்பதற்கும் வழிகள் செய்கின்றன. மழை நீர் வகையாக நிலத்துள் சேர்த்து வைக்கும் சாதனங்களை நாமழித்து விடுவோமானல், நாம் எமது பிள்ளைகளுக்கு பாலைவனத்தையே விட்டுச் செல்வோம். ஆகவே புளி, விளா, இலுப்பை, ஆமணக்கு போன்ற மரங்களை வீணுக அழித்து விடாது நாம் பாதுகாத்து வருவதோடு இவற்றை அதிகரிக்கவும் வழிசெய்ய வேண்டும்.''

இவ்வாறு வலி. மேற்கு விவசாயிகளுக்கு நடத்தப்பட்ட செய்முறைப் பயிற்சி வகுப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய

# பிரான்சின் புதிய ஜனதிபதி யார்?

பாரிஸ், ஜூன் 1

ஜெனரல் டிகோல் பதவி துறந்ததைத் தொடர்ந்து பிரான்சின் புதிய ஜனதிபதியைத் தெரிவு செய்வதற்காக பிரெஞ்சு வாக்காளர்கள் இன்று வாக்களித்தனர். வாக்களிப்பு மிகச் சுறுசுறுப்பாக இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனதிபதி பதவிக்கு ஏழு பேர் போட்டியிடுகின்ற வாக்களிப்பில் ஜனதிபதியாக ஒருவரைத் தெரிவு செய்வதற்குத் தேவையான பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கத்தவறினல் அதிக வாக்குகள் பெற்ற முதலிரண்டு ஸ்தானத்திலிருக்கும் இரு அபேட்சகர்களுக்கிடையில் மீண்டும் இம்மாதம் 15ந்-திகதி தேர்தல் நடைபெறும். திரு. போஹருக்கும் திரு. பொம்புடோவுக்குமிடையில் ஒருவரைத்

### சிங்கையிலும் இனக் கலகம்

சிங்கப்பூர், ஜூன் 1

மலேஷியாவில மலாயர்களுக்கும் சீனர்களுக்கு மிடையில் ஏற்பட்ட இனக்கலவரம பல உயிருக்கும் உடைமைக்கும் பெரும் சேதமேற்படுத்தி இன்னமும் அமைதியற்ற நிலைநீடித்துவரும் அதேசமயம் சிங்கப்பூரில்

### 'எந்த சக்தியாலும் மாற்றிவிட முடியாது'

யாழ்ப்பாணம், திங்கள்

சிறுபான்மை தமிழ் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களத்தை போதன மொழியாக்க விரும்புவதை எந்த சக்தியாலும் மாற்றி விடமுடியாது. பிள்ளைகள் பௌத்த மதம் மாறுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது இந்த நிலைமைக்கு எம்மைக் கொண்டு வந்து விட்டீர்கள்

யாழ்ப்பாணத்தில் நடத்திய சர்வகட்சி மகாநாட்டில் சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர் திரு. பி. கதிரவேலு பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கதிரவேலு கூறியதாவது அரசாங்கம் பாடசாலைகளை பொறுப் பேற்கு முன் எந்த தனிப்பட்ட பாடசாலைகளிலும் சிறுபான்மை தமிழ் பிள்ளைகளுக்கு இடமளிக்கவில்லை காந்திமகாலை வந்து அத்திபாரக்கல் நாட்டிய இராமநாதன் கல்லூரியில் கூட சிறுபான்மை பிள்ளைகளுக்கு இடமளிக்கப்படவில்லை. இப்படியான பல கஷ்டங்கள் மத்தியில் தான் மதம் மாறினல் என்ன என்ற எண்ணம் உருவாகியது.

சமூக ஏற்றத் தாழ்வு ஒழிப்பு சட்டத்தை திருத்தும் படி பல தடவை கேட்டும் அது நடக்கவில்லை. பெரும்பான்மைத்தமிழர் நினைத்தால் தீண்டாமை ஒழியா? நாங்கள் இன்னும் எத்தனை காலம் தான் பொறுத்திருக்க வேண்டும்.

# 'பெருமானரின் அன்பை பெறவழி' - மீலாத் விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

நபி பெருமானர் (ஸல்) அவர்களின் ஜனனவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் புதுப் பள்ளிவாசல் பந்தற் குழுவினர் நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் நடத்திய கூட்டம் யாழ். மாநகரசபை அங்கத்தவர் ஜனப் எம். ஏ. சி. ஏ. காதர் தலைமையில் நடைபெற்றது. ஜனப் எம். எம். சுல்தான் அப்துல்காதரின் கிருத்துடன்கூட்டம் ஆரம்பமானது. செல்வி எஸ். சித்திசுபை இஸ்லாம் கூறும் வாழ்க்கை முறை பற்றி உரைநிகழ்த்தினர். அடுத்து சிதம்பராக்கல்லூரிஆசிரியர் ஜனப் கே. எல். எம். சரீபு ''விழாவுடன் மாத்திரம் பெருமானரின் அன்பைப் பெற்றுவிடமுடியாது. முறையாகச் செயல்பட்டு வாழ்க்கைமுறையை மாற்றியாகவேண்டும். அதுவே உண்மையான அன்பைப் பெற வழி'' என்றுர்.

உள்ளூராட்சி ஆய்வு அதிகாரி ஜனப் எம். ஏ. அப்துல் மஜீத, பெருமானரின் அன்பைப் பெற அவர்கள்மீது சலவாத்து ஓதுவது ஒரு சிறந்த வழியென்று கூறினர்.

தலைவர் திரு. எம். சி. ஏ. காதர் தமது தலைமையுரையில், எட்டுப்பத்து மேடைகளில் இப்படி விழாக்களை நடத்துவதிலும் பார்க்க ஒரே மேடையும் ...களுக்கு நன்றி கூறினர்.

தலைவர் இனிமேலாவது ஒரு மேடையமைத்து ஒரே கருத்துடன் பல விஷயங்களை நடத்த முஸ்லிம்கள் ஒன்றுபடுதல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

குறை கூறுவதைவிட்டு எப்படி நிறைவாகச் செய்யலாம் என்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்றும் அவர் கூறினர். அத்துடன் இலங்கையிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் பல மௌலவி ஆசிரியர்களையும் பெற்றுக்கொள்ளவில்லை. இதுபற்றி பிரதம மந்திரிக்கும் கல்வி மந்திரிக்கும் மகஜர் அனுப்பவேண்டும். அதுபோன்றே வேலையற்றிருக்கிம் வாலிபருக்கும் மங்கையர்க்கும் கைத்தொழில் நிலையங்களை அமைத்துத் தரும்படி கைத்தொழில் மந்திரிக்கொரு மகஜர் அனுப்புதல் வேண்டும் என்ற பிரேரணைகள் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறின. சலவாத்துடன் கூட்டம் முடிவுற்றது. (மு. நி.)

### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாநிலச் சைவ இளைஞர் மா மன்றத்தின் ஐந்தாவது வருடாந்தக் கூட்டம் 29-5-69 காலை 10 மணியளவில் திரு. வை. இரகுநாத முதலியார் தலை...

நாவலர் மண்டபத்தில்

## நால்வர் கோவிலுக்கு அத்திபாரம் நாட்டப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையிலுள்ள நாவலர் மண்டபத்திற் கருகாமையில் நால்வர் கோவிலுக்கான அத்திபாரக்கல் நேற்று முன்தினம் நாட்டப்பட்டது.

சென்னை கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர் திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் இதற்கான அத்திபாரக் கல்லை நாட்டினர்.

இந்த நால்வர் கோவிலில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திகள், மாணிக்கவாசகர் ஆகியோரது திருவுருவங்களுடன் சேக்கிழாரது திருவுருவமும் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கின்றது. ஐந்து திருவுருவங்களையும் ஐவர் இலவசமாகச் செய்து கொடுக்க முன்வந்திருப்பதாக மேற்படி சபையைச் சேர்ந்த திரு க. கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

நால்வர் கோவில் கட்டட வேலைக்கான சகல ஒழுங்குகளையும் சமயப் பிரசாரகர் திரு. மு மயில்வாகனம் கவனித்து வருகின்றுர். (கா. நி

# திருமலைச் செய்திகள்

— நமது நிருபர் து. பாலேந்திரா —

### மஜ்ம உல் உலமா நிர்வாகிகள்

கிண்ணியா மஜ்ம உல் உலமா சங்கப் பொதுக்கூட்டம் மௌலவி எம். எம். மதார் (முன்னுள் தலைவர்) தலைமையில் நடைபெற்ற பொழுது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்பட்டுப் பதவி ஏற்றனர்.

தலைவர் அல்ஹாஜ் மௌலவி ஏ. எஸ். இஸ்மாயில், உப தலைவர் மௌலவி ஏ. ஆர். எம். கமீம், செயலாளர் மௌலவி ஏ. எச். எம். ஏ. ஜவாது, தனதிகாரி மௌலவி வி வி. ஏ ஒபூர் மேலும் ஏழு மௌலவிகளைக் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

### வத்தை கவிழ்ந்தது

திருக்கோணமலையிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு மூதூரை நோக்கிவந்துகொண்டிருந்த வத்தை ஒன்று மகாவலி கங்கை சங்கமமாகும் கொட்டியாபுரப்பற்றுக் குடாக்கடலைச் சமீபிக்கும்போது பலமான கடல் அலைகளினல் மோதுண்டு நீரில் அமிழ்ந்து விட்டது. சீனி, மாவு மற்றும் உணவுப் பொருட்களும் ஏனைய பல பண்டங்களும் சேதத்திற்குள்ளாயின. பிரயாணிகள் உயிர் தப்பினர்.

### மூதூர் ஐ. தே. க. கிளை

மூதூர் தொகுதியிலுள்ள தம்பலகாமம் மேற்கில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஐ. தே. க. கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ள

### 'நிதி போதாது'

மூதூர் காரியாதிகாரியின் பிரிவில் காணி விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் வீடுகள், கிணறுகள், மலசலகூடங்கள் நிறுவுவதற்கென இந்த நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்ட 5,000 ரூபா போதாமையால் மேலும் 5,000 ரூபா ஒதுக்கித்தருமாறு மூதூர் காரியாதிகாரி திரு. வே. சாம்பசிவஐயர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

### விளையாட்டுப் போட்டி

திருக்கோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 6-ந் திகதி திருக்கோணமலை மக்கெய்சர் சுற்றுமதில் விளையாட்டரங்கில் நடைபெற இருக்கிறது. விளையாட்டுகளுக்கான புதிய உத்தியோகஸ்தர் திரு. எல். திருச்செல்வம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார். இக்கல்லூரியின் 4 இல்லங்களான விபுலானந்தா, சிவானந்தா, இராமகிருஷ்ண, விவேகானந்தா ஆகிய 4 இல்லங்களையும் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

### யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் திறப்புக் கோர்வையொன்று கண்டெடுத்து திரு. எட்வேட் என்பவர் ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

### உற்சவம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யைத் தெரிவு செய்வதற்காக பிரெஞ்சு வாக்காளர்கள் இன்று வாக்களித்தனர். வாக்களிப்பு மிகச் சுறுசுறுப்பாக இருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி பதவிக்கு ஏழு பேர் போட்டியிடுகின்றனர். ஆனாலும் இப்போது தற்காலிக ஜனாதிபதியாகக் கடமையாற்றும் திரு. போஹருக்கும் முன்னாள் பிரஞ்சுப் பிரதமரும் ஜெனரல் டிகோலின் கட்சியைச் சேர்ந்தவருமான திரு. பொம்பிடோவுக்குமிடையில் தான் கடும்போட்டியிருப்பதாகக் கருதப்படுகிறது. இன்றைய கிடைக்கத்தவறினால் அதிக வாக்குகள் பெற்ற முதலிரண்டு ஸ்தானத்திலிருக்கும் இரு அபேட்சகர்களுக்கிடையில் மீண்டும் இம் மாதம் 15ந்-திகதி தேர்தல் நடைபெறும். திரு. போஹருக்கும் திரு. பொம்படோவுக்குமிடையில் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக வாக்களிப்பு நடைபெற்றால் இடதுசாரிகளின் ஆதரவு திரு. போஹருக்கே கிடைக்கலாமென்றும் அவரே புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பிருக்குமென்றும் கருதப்படுகிறது.

## உலக சக்திகளின் சேர்க்கையில் மாற்றம்

### திருமதி இந்திரா விமர்சனம்

மணாலி, ஜூன் 1

''எல்லைச் சண்டைகளாலும் நீடித்த வறட்சியினாலும் இந்தியநாட்டுக்கு ஏற்பட்டிருந்த தடங்கல்களைச் சமாளித்துவிட்டோம்'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இங்கு தெரிவித்தார் உணவு உற்பத்தி அதிகரித்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

உலகநிலை பற்றி பிரதமர் இந்திரா குறிப்பிடுகையில், உலகில் பல்வேறு சக்திகளின் சேர்க்கை வேகமாக மாறிக் கொண்டிருக்கிறதென்றார். அமெரிக்காவும் சீனாவும் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் மிக நெருக்கமாக இருந்த சீனாவும் சோவியத் யூனியனும் இப்போது ஒன்றையொன்று எதிர்த்துக் கொணடிருப்பதாகவும் கூறினார். மேற்கத்திய அரசுகளுடன் வலிமை பொருந்திய நண்பனாக இருந்த மேற்கு ஜெர்மனி இப்போது நவசீனாவுடன் நெருங்கிய வர்த்தக உறவு கொண்டிருப்பதாகவும் திருமதி இந்திரா கூறினார்.

## சிறையில் கலகம்

ஹைதராபாத், ஜூன் 1

ஹைதரபாத் மத்தியசிறையிலுள்ள தெலிங்கானா கிளர்ச்சிக் கைதிகள் கலகம் செய்ததைத் தொடர்ந்து அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்தனர். கிளர்ச்சிக் கைதிகள், கற்களையும் மற்றும் கையில் அகப்பட்ட பொருள்களையும் வீசியதில் பொலிசார் பலர் காயமடைந்தனர்.

## பெருந்துறையில் காங்கிரஸ் தோல்வி

சென்னை, ஜூன் 1

தமிழ்நாடு சட்டமன்றத்துக்கு பெருந்துறைத் தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் சம்யுக்த சோஷலிஸ்ட்கட்சி அபேட்சகர் திரு. எஸ். சண்முகசுந்தரம் வெற்றியீட்டினார். அவருக்கு அடுத்தபடியாக வந்த காங்கிரஸ் அபேட்சகர் திரு. கே. ரி. முத்துசாமியைவிட ஏழாயிரம் வாக்குகள் அதிகமாகப்பெற்று திரு சண்முகசுந்தரம் வெற்றியீட்டினார். சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி அங்கத்தவராக இருந்த திரு. பாலசுப்பிரமணியம் காலமானதால் இந்த இடைத் தேர்தல் நடைபெற்றது.

## பொலிவியாவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

லாபாஸ், ஜூன் 1

அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸனின் விசேஷ பிரதிநிதியாக லத்தின் அமெரிக்க ராஜ்யங்கள் சிலவற்றுக்கு விஜயம்செய்த திரு. நெல்சன் றொக்பெல்லர், பொலிவியாவில் தமது விஜயத்தைச் சுருக்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். பொலிவியாவில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்குமிடையில்மோதல் அதிகரிப்பதைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே அவர் தமது விஜயத்தைச் சுருக்கிக்கொண்டு விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்புடன் பொலிவிய அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத் திரும்பியிருக்கிறார்.

திரு. றொக்பெல்லர் இப்போது டிரினிடாட்டில் உள்ளார்.

சிங்கப்பூர், ஜூன் 1

மலேஷியாவில மலாயர்களுக்கும் சீனர்களுக்குமிடையில் ஏற்பட்ட இனக்கலவரம பல உயிருக்கும் உடைமைக்கும் பெரும் சேதமேற்படுத்தி இன்னமும் அமைதியற்ற நிலைநீடித்துவரும் அதேசமயம் சிங்கப்பூரில் நேற்று மலாயர்களுக்கும் சீனர்களுக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதில் 17 பேர் காயமடைந்தனர்.

## ஜனசங்கத் தலைவர் ஆஸ்பத்திரியில்

புதுடில்லி, ஜூன் 1

இந்திய ஜனசங்கக் கட்சித் தலைவர் திரு. அதுல்பிகாரி வாஜ்பாயி புதுடில்லியில் ஓர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வயிற்றில் முன்பு ஏற்பட்ட புண் சிகிச்சையின்பின் ஆறியிருந்த போதிலும் மீண்டும் அது தொல்லைகொடுக்கத் தொடங்கியிருக்கிறதாம்.

## கருணாநிதியும் குர்ணம்சிங்கும்

சென்னை, ஜூன் 1

பஞ்சாப் முதன்மந்திரி திரு. குர்ணம்சிங்குக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்றிரவு விருந்தளித்துக் கௌரவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் பற்றி இரு முதல் அமைச்சர்களும் பேசியதாகத் தெரிகிறது.

## பஸ்சேவை சீர்கேடு

புலோலி, ஞாயிறு

பஸ் சேவை சீர்கேட்டினால் பிரயாணிகள் பெருத்த அவஸ்தைக்குள்ளாகின்றனர். பருத்தித்துறையிலிருந்து மந்திகை நெல்லியடி ஊடாகச் செல்லும் பஸ்கள் போதியளவு சேவையில்லாததால் தினமும் பல பிரயாணிகள் அவஸ்தைப் படுகின்றனர்.

இச் சேவையில் போதியளவு பஸ்கள் இல்லாததால் யாழ்ப்பாணத்திற்கு செல்லும் உத்தியோகத்தர்களும். வர்த்தகர்களும் நாளுக்கு நாள் பலமணி நேரம் காத்திருந்தே அலுவலகங்களுக்கு செல்ல வேண்டி இருக்கிறதாம்

## மஹோற்சவம்

உடுவில், ஞாயிறு

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவவிழா இப்பொழுது நடைபெற்று வருகின்றது. வைகாசிவிசாகத்திலன்று தேர்த்திருவிழாவும், மறுதினம் தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று உற்சவம் பூர்த்தியடையும்.

நாம் பாதுகாத்து வருவதோடு இவற்றை அதிகரிக்கவும் வழிசெய்ய வேண்டும்.''

இவ்வாறு வலி. மேற்கு விவசாயிகளுக்கு நடத்தப்பட்ட செய்முறைப் பயிற்சி வகுப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய வலி. மேற்கு காரியாதிகாரி திரு. மாணிக்க நடராசா கூறினார்.

## மீண்டும் வேலை

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனையாளராக கடமையாற்றிய திரு. யேசுதாசனுக்கு மீண்டும் வேலை வழங்குமாறு தொழில்பகுதியினர் உத்தரவிட்டுள்ளனர். யாழ்ப்பாண தொழில் இலாகா அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்தே வேலை வழங்குமாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மலேரியா தடுப்பு

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் சுகாதாரப் பகுதியினர் கோப்பாய்ப் பகுதியில் மலேரியா தடுப்பு மருந்து தெளிப்பதற்கான வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வீடுகள் தோறும் இவர்கள் சென்று தடுப்புமருந்து தெளித்து வருகின்றனர். இதற்கான மேற்பார்வையை கோப்பாய்சுகாதார அதிகாரி திரு. வி.தேவராஜன் செய்து வருகிறார்.

## ஊர்காவற்றுறை ப.ச.கோரிக்கை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனைப்பகுதிக்கு மரணவிசாரணை அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என அரசினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை ஊர்காவற்றுறைப்பட்டினசபை நிறைவேற்றியுள்ளது.

## ஞானசம்பந்தர் குருபூசை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணைசைவஇளைஞர்சங்கத்தார் திரு ஞானசம்பந்த சுவாமிகள் குருபூசைத் தினத்தை கொண்டாடுவதற்கு முயற்சி எடுத்து வருகின்றனர்.

சரவணை-'தேவபுரம்' ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தில் பகல் பூசை நிகழ்ச்சிகளும், மாலை சம்பந்தசுவாமிகள் பற்றிய உபந்நியாசங்களும் நடைபெற ஏற்பாடாகின்றது.

சிறந்த வழியென்று கூறினார்.

தலைவர் திரு. எம். சி. ஏ. காதர் தமது தலைமையுரையில், எட்டுப்பத்து மேடைகளில் இப்படி விழாக்களை நடத்துவதிலும் பார்க்க ஒரே மேடையும் ஒரே கஞ்சாரியையும் நடாத்தினால் செலவு மிச்சமாகும். பணத்தை பெருமானார் கல்விச் சகாயநிதி என்று ஆரம்பித்து ஆரம்பித்து ஏழைப்பிள்ளைகளுக்கு உதவலாமென்றார்.

செல்வன் ஏ. எம். நூர் ஜஹான் ஏந்தல் நபி ஏழைகளின் தோழர் என்னும் விஷயம் பற்றி உரையாற்றினார்.

வண்ணை மேற்கு முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஜனாப் எம். ஏச். எம். அப்துற் றஸ்ஸாக் ''பெருமானார் செய்தது விழாக்கள் அல்ல; மக்கள் மத்தியில் இறைவனுடைய தத்துவத்தை ஊர் ஊராகச் சென்று போதித்துச் சாதித்தும் காட்டியதே. நாமும் சமூகத்தின் குறையை வீடுவீடாகச் சென்று கூறுவதன் மூலம் மனிதனின் கடமை எவையென விளக்குவோம். அப்போது பெருமானாரின் சபா அத் எமக்குக் கிட்டும். வீண் செலவு செய்வது பெருமானாருக்குப் பிடித்தமற்ற செய்கையாகும்'' என்று கூறினார்.

சன்மார்க்க இயக்கத் தலைவர் ஜனாப் எம். எஸ். அஹ்மது, முஸ்லிம்கள் இக்காலத்தில் வீழ்ச்சியடையக் காரணம் இறைவனுடைய கட்டளைகளை மறந்தமை என்ற பொருள்படக் கூறினார். பின் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர் ஜனாப் ஏ.எஸ்.அப்துல்காதர் இஸ்லாமியராகப் பிறந்ததே ஒரு பெரிய றஃமத். அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தவேண்டாமா? என கேட்டார்.

ஜனாப் ஏ.எல்.எம்.யாஸீன் இஸ்லாமிய இன்னிசை விருந்தளித்தார்.

இலங்கை வானொலி திருக்குர் ஆன் விரிவுரையாளர் அல்ஹாஜ் என். எம். மீரான் முகியித்தீன் ஆலிம், திருக்குர் ஆனில் இருந்து பல கருத்துக்களை எடுத்துக்கூறியதுடன் அன்னதானம் செய்வதில் குற்றம் எதுவும் இல்லையென்று ஆதாரத்துடன் விளக்கினார். நாம் இன்னும் முஸ்லிம்களாக வாழ்ந்துகொள்ளவில்லை. அன்னியருடைய வாழ்க்கை முறையிலே இருக்கிறோம். நம்முடைய வாழ்க்கைமுறையில் வாழ்ந்துவந்தால் ஒருகாலும் அழிவு ஏற்படாதென்றும் அவர் கூறினார்.

காரியதரிசி எம். ஏ. சி. சலீம் கூட்டத்திற்கு ஒத்துழைப்புக் கொடுத்தவர்

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாநிலச் சைவ இளைஞர் மான்றத்தின் ஐந்தாவது வருடாந்தக் கூட்டம் 29-5-69 காலை 10 மணியளவில் திரு. வை. இரகுநாத முதலியார் தலைமையில் நடைபெற்றது.

''சைவ இளைஞன்'' என்ற சஞ்சிகையை வெளியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

போஷகர்கள்:- திரு. மு. மயில்வாகனம் திரு. இ. வைத்திலிங்கம்.

தலைவர்:- திரு. வை. இரகுநாதமுதலியார்.

உப-தலைவர்கள்:- திரு. சி. சிவபாலசிங்கம், திரு. எஸ். சண்முககுமரேசன், திரு, க. முருகேசு.

செயலாளர்: திரு. வ. கந்தசாமி.

உபசெயலாளர்:- திரு. க. நல்லையா.

பொருளாளர்:- திரு. கா. இரகுநாதன் 8 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விசேட பொதுக்கூட்டம் யாழ். மேற்கு கூட்டுறவு உதவிஆணையாளரால் கூட்டப்பட்டது. யாழ். கூட்டுறவு காரியாலயப் பரிசோதகர் கு. யோ. அகஸ்ரீன் கூட்டத்துக்கு தலைமைவகித்தார். புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: வி. இராசரத்தினம், காரியதரிசி வே. பெர்னாண்டோ. ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## இந்துமாமன்றக் கூட்டம்

உடுவில், ஞாயிறு

சுன்னாகம் இந்து மாமன்றத்தின் கூட்டம் மயிலணி சைவவித்தியாசாலையில் திரு அ. தம்பியப்பா தலைமையில் நடைபெற்றது.

தேவாரப் போட்டி வியாசப்போட்டிபேச்சுப்போட்டி திருக்குறள் மனனப்போட்டி ஆகியவற்றை நடாத்துவதற்கு பண்டிதர் கா. நமசிவாயம், ஆசிரியர் நா. செல்லத்துரை. ஆ. தம்பியப்பா ஆகியோர் கொண்ட ஒரு உபகுழுவும், சைவப்பிரசங்கங்களை நடாத்தவும், கூட்டுப் பிரார்த்தனை செய்யவும் திரு. ஆ. மார்க்கண்டன், திரு. பொ. வல்லிபுரம், திரு. எஸ். வைத்திலிங்கம் ஆகியோர் கொண்ட ஒரு உபகுழுவும் மேற்படி கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

## மூதூர் ஐ. தே. க. கிளை

மூதூர் தொகுதியிலுள்ள தம்பலகாமம் மேற்கில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஐ. தே. க. கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் ஜனாப் கே. எம். முஸ்தபா. செயலாளர் ஜனாப் எம். அலி அக்பர், உப செயலாளர் திரு. கே. நவரத்தினம், பொருளாளர் ஜனாப் ஏ. எம். ரகுமான். 13 பேர்களைக்கொண்ட நிர்வாகக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

கோர்வையொன்று கண்டெடுத்து திரு. எட்வேட் என்பவர் ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

## உற்சவம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம்- பறாளை சிவசுப்பிரமணிய சுவாமிகள் தீர்த்த வைபவம் சுழிபுரம் திருவடிநிலைத் தீர்த்தக் கரையில் நேற்றுக்காலை நடைபெற்றது. சுமார் ஆயிரத்திற்கு மேலான பக்தர்கள் தீர்த்தம்ஆடி நோன்பை நிறைவேற்றினர்.

**ஈழநாடு' பத்தாண்டு நிறைவுவிழா**

## 26 மைல் மரதன் ஓட்டம் (14—6—69)

### விண்ணப்பப்பத்திரம்

பெயர்: ..................................

விலாசம்

..........................

..........................

வயது: ..........................

1—6—69

..........................

கையொப்பம்

## போட்டி விதிகள்

1. போட்டியில் பங்கு பற்றுபவர்கள் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் ஒரு விளையாட்டுச் சங்கத்தில் அல்லது இலங்கை A. A. A. யில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

2. போட்டியில் பங்கு பற்றுபவர் ஏதாவது மருந்து குடிப்பவராக இருந்தால் விலக்கப்படத் தக்கவராக இருப்பார். உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகள் இவர் பங்கு பற்றக்கூடாது என்று தடுத்தால் அவர் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

3. போட்டியில் பங்கு பற்றுபவர் வீதி விதிகளைக் கவனித்து அதன்படி நடக்கவேண்டும்.

4. போட்டிஅமைப்பாளர்கள் வழங்கும் பானங்களைத் தவிர வேறெதையும் போட்டியில் பங்கு கொள்வோர் எடுத்துச் செல்லவோ, உண்ணவோ கூடாது.

5. போட்டியில் கலந்து கொள்வோர் ஓடும் போது காயம் ஏதாவது ஏற்பட்டால் அதற்கு போட்டி நிர்வாகஸ்தர் பொறுப்பாகமாட்டார்.

6. ஜூன் மாதம் 1-ம் திகதிக்குமுன் ஆறுமாதங்களாக தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக இருப்பவர்களே இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் ஜூன் மாதம் 5-ம் திகதிக்குமுன் **'ஈழநாடு', த. பெ எண்-49, யாழ்ப்பாணம்** என முகவரியிட்டு அனுப்பப்படல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எனது நாட்டுப்பற்று, தனிப்பட்டவர்களுக்கும் எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

— மகாத்மா காந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷ வைகாசி மாதம் 20ந் திகதி (2-6 69)


## வெளியுலகில் இலங்கை

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது, என்பர். உலகில் இலங்கை மிகச் சிறிய ஒரு தீவாக இருந்தாலும் அதன் மதிப்பு உலகில் குறைந்ததல்ல. இலங்கைத் தலைவர்கள் சரியான முறையில் சர்வதேச அரங்கில் தமது பங்கைச் செலுத்தினால் இலங்கையின்மதிப்பு மேலும் பன்மடங்கு அதிகரிக்கும்

பிரதமர் திரு டட்லிசேனநாயகா உத்தியோக ரீதியில் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு நான்கு நாள் விஜயம் செய்து திரும்பியிருக்கிறார். அவரது விஜயம் வெற்றியளித்திருக்கிறதென்றே சொல்லவேண்டும் இலங்கைக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குமிடையே இதுவரை இருந்துவந்த அரசியல் பொருளாதார கலாச்சார உறவுகளில் இருநாட்டுத் தலைவர்களும் திருப்தியடைந்திருப்பதுடன் இருநாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு தீவிர முயற்சி செய்யவேண்டுமென்றும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஐக்கிய அரபுக் குடியரசு மக்களின் கடும் உழைப்பினாலும் சோவியத் யூனியனின் உதவியினாலும் நிர்மாணிக்கப்பட்டு வரும். அஸ்வான் அணைக்கட்டு மாபெரும் சாதனை. இந்த அணைக்கட்டுப்போன்றதுதான் இலங்கையில் உருவாக்கப்படவிருக்கும் மகாவலிகங்கைத் திட்டம் என்று பிரதமரே தெரிவித்திருக்கிறார், அவரது ஐக்கிய அரபுக் குடியரசு விஜயம் இங்கு மகாவலி கங்கைத் திட்டத்தை துரிதமாக்குவதற்கும் இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு மக்களின் உழைப்பைத் திரட்டுவதற்கும் உதவுமென நம்பலாம். ஐக்கிய அரபுக் குடியரசுக்குப் பல பிரச்னைகள் இருக்கின்றன. இப்பிரச்னைகளுக் கிடையிலும் அந்தநாடு பலதுறைகளிலும் முன்னேற்றமடைந்து வருகிறது. வெளியார் பிரச்னையே இல்லாத இலங்கையில் சிலர் நிச்சயம் இலங்கை மற்றவர்கள் பிரமிக்கத் தக்க முறையில் முன்னேற்றம் பெறுமென்று சொல்லலாம். பிரதமரின் ஐக்கிய அரபுக்குடியரசு விஜயத்தினால் இலங்கைத் தேயிலையை அந்நாட்டு மக்கள் அதிகமாக வாங்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பருத்தி உற்பத்தியிலும் ஐக்கியஅரபுக்குடியரசு முன்னணியில் நிற்கிறது. இங்கு நெசவுத்தொழில் விருத்தியடைந்துவருகின்றபோதிலும் நெசவுக்கு முக்கிய தேவையான பருத்திக்கு இன்னும் வெளிநாடுகளையே நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. பருத்தியை ஐக்கிய அரபுக் குடியரசிடமிருந்து பண்டமாற்று வர்த்தக ஒப்பந்த மூலம் இங்கு பெறலாமென்றாலும் நமக்குத் தேவையான பருத்தியை நாமே உற்பத்திசெய்வதற்கு பிரதமரின் ஐக்கிய அரபுக் குடியரசு விஜயம் உதவுமென எதிர்பார்க்கலாம்.

நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்து வரும் இலங்கைப் பிரதமர், மேஆசியாவில் அமைதி ஏற்படவேண்டுமானால் இஸ்ரேலியர் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களிலிருந்து வெளியேற வேண்டுமென்று தெரிவித்திருப்பது நடுநிலைமை நாடுகளின் கருத்தையும் அதேசமயம் இஸ்ரேலுடன் ராஜீய உறவு வைத்திருக்கும் இலங்கையின் நிலையையும் தெளிவுபடுத்துவதாகும். மேற்காசியப் பிரச்னையில் ஒரு நல்ல முடிவு காண இலங்கை தொடர்ந்து ராஜீய முறையிலும் முயற்சிசெய்தால் பயன் கிடைக்காமல் போகாதென்று கூறலாம். சர்வதேச அமைதிக்கும் சர்வதேசப் பிரச்னைகளுக்கும் தீர்வுகாண்பதில் இலங்கை ஆற்றக்கூடிய பணிகள் நிறைய இருந்தாலும் உள்நாட்டில் பிரச்னைகள் பெரிதுபடாமலும் அமைதி குலை...

இன்று பொங்கல்

# சாதிப்பாகுபாடுகண்டறியாத வற்றாப்பளை அம்மன் கோவில்

—செ. பாலச்சந்திரன் —

சேரன் செங்குட்டுவனால் கற்பின் செல்வி கண்ணகிக்குச் சிலை எடுக்கப்பட்டது. கடல்சூழ் இலங்கைக் கயபாகு வேந்தனால் கண்ணகி வழிபாடு இலங்கையில் ஆரம்பமானது. அன்று தொட்டு இன்று வரையும் கற்பரசி கண்ணகிக்கு எல்லா இடங்களிலும் வழிபாடு நடைபெறுகிறது.

கடல் சூழ் இலங்கைக் கயபாகு வேந்தனால் விழா எடுக்கப்பட்ட கற்பின் செல்வி கண்ணகி பத்துத் தலங்களில் தங்கிக் காட்சி கொடுத்து வந்தாள். ஈற்றில் அவள் தங்கியபுண்ணிய தலமே ஈழநாட்டின் வடபால் அமைந்துள்ள பத்தாம்பளையாகும். கண்ணகி அம்பாள் தங்கிய பத்தாவது இடமானபடியால் பத்தாம்பளை என்னும் நாமத்தைப் பெறலாயிற்று. இப்பெயர் காலப்போக்கில் வற்றாப்பளை என மருவி தற்போது வற்றாப்பளையெனவே வழங்கப்பட்டு வருகிறது.

ஆநிரை மேய்த்து நின்ற ஆயர்களுக்கு ஒரு முதுமைப் பெண் உருவம் கொடுத்தாள் கண்ணகி அம்பாள். அன்னவளின்பசி ஆற்றபாற்சோறு சமைத்தனர். ஆயர் சிறார்கள் சமையல் முடிவில் காட்சி கொடுத்த கிழமாதைக் காணாது தவித்தனர் சிறுவர் சற்று நேரத்தால் அவ்விடத்தில் போடப்பட்ட வேப்பம் குற்றி தளைத்து பச்சைப் பசேலென சிறுவரின் கண்ணுக்கு விருந்தளித்தது. அன்று தொட்டு அவ்விடத்திலே கோவில் எழுப்பி அம்பாளைத் தரிசித்து வருகின்றனர் பண்டாரவன்னியன் மரபினர்.

'சித்திரைத்திங்களில் சிறுவேப்பிலை உதிர்த்தி வைகாசித் திங்கள் பௌர்ணமியன்று வருவேன் ஒருமுறை' என்று ஒரு அசரீரி வாக்கும் மக்கள் செவிக்கு ஒலித்தது எனவும் ஒரு கதை நிலவுகிறது. அதற்கிணங்கவே தான் ஒவ்வொரு ஆண்டிலும் வைகாசியில் வரும் பௌர்ணமிக்கு அண்மையில் வரும் திங்களில அம்பாளுக்குப் பொங்கல் விழா நடத்தி வருகிறார்கள்.

வைகாசித் திங்கள் பௌர்...

...யகர் ஆலயத்திலிருந்து முல்லைத்தீவுக் கடற்கரைக்குச் சென்று தீர்த்தம் எடுத்து அந்நீரையே நெய்யாகப் பாவித்து திருவிளக்குக்கு விட்டு எரிப்பார்கள். பச்சைத் தண்ணீரில் விளக்கு எரிக்கும் முறை வானளாவி வளர்ந்து நிற்கும் விஞ்ஞானத்தின் மூலக் கொள்கைக்கே சவால விடுத்து நிற்பதாகும். இங்ஙனம் எடுக்கப்பட்ட கடலநீர்த் தீர்த்தத்தால தொடர்ச்சியாக ஏழு நாட்கள் விளக்கு எரிக்கப்பட்டு எட்டாம் நாள் அவ்விளக்கு காட்டு விநாயகர் ஆலயத்திலிருந்து வற்றாப்பளை அம்பாள் சந்நிதிக்கு எடுத்துச் செல்லப்படும். இக்கடல் நீரை நெய்யாகப் பாவித்து விளக்கேற்றும்போது கற்புச் செல்வியின் சிலம்பு கூறலும் படிக்கப்படும்

18 ம் நூற்றாண்டின் முடிவிலும் 19 ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மேலைத்தேய ஏகாதிபத்தியத்திற்கு தமிழ்ப் பகுதியில் எதிர்ப்புக் கொடி உயர்த்தி, வீர வாழ்வு வாழ்ந்த பண்டாரவன்னியனின் காவல் தெய்வம் கண்ணகி அம்மன் தெய்வமே என அறியப்படுகிறது.

ஒல்லாந்தராலும் ஆங்கிலேயராலும் பண்டாரவன்னியன் கொள்ளைக்காரன் என அழைக்கப்பட்டான் என்று வன்னியின் ஆங்கிலேய நிர்வாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவன் ஒரு மன்னன்தான். அதுவும் கண்ணகி அம்மனின் பக்தனாகவும் மானியமுறையின் சின்னமாகவும், கண்டி அரசனின் நண்பனாகவும் அவன் திகழ்ந்தான். அத்தகைய மாமன்னனின் காவற் தெய்வத்தையே கண்டி அரசர்களும் மிக்க நம்பிக்கையுள்ள தெய்வமாக மதித்து எப்பெரும் காரியங்களைத் தொடங்கும்போதும் கண்ணகை அம்பாளை நேரில் சென்று தரிசித்து அவளருள் பெற்று கருமத்தைச் சாதித்து வெற்றிமேல் வெற்றி பெற்றனர் என்பர்.

வட மாகாணத்தில் உள்ள பெயர்பெற்ற கோவில்களின் வரிசையில் ... த்தை வகிக்கும் இக்கோவில் சாதிப்பிரச்னையையே கண்டிருக்க மாட்டாது. சாதிப்...

...குடன் கோவிலின் சகல இரும்புக் கதவுகளும் கழற்றப்பட்டன.

இதற்கெல்லாம் வழிகாட்டிகளாக நின்றவர்கள் பெருநோக்கமும், பெரும் தன்மையும் உள்ள கோயில் நிர்வாகத் தலைவர்களாவர். நிர்வாகத் திறனும் எதற்கும்விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் கொண்ட இத் தலைவர்களின் சேவைக் காலங்கள் கோவிலின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும் என்றால் மிகையாகாது.

ஈழநாட்டின் நாலாபக்கங்களிலும் இருந்து அம்பாளைத் தரிசித்தற்கு திரள் திரளாக கருணை மீதுறப்பெற்றவர்கள் வந்து அண்டியிருக்கும் வீடுகளில் தங்கி அம்பாளின் கருணையைப் பெற்றுச் செல்வார்கள் பொங்கல் அன்று காலை தொடக்கம் ஒரே பொன்நகரமாகக்காட்சியளிக்கும் அம்பாள் வீற்றிருக்கும் வற்றாப்பளையம்பதி. நேர்த்திக்கடன்களை முடிப்பதற்காக மக்கள் முந்தியடித்துக்கொண்டு செல்வார்கள். பொங்கல் அன்று வீடுகளில் சிறுவர்களுக்கெல்லாம் ஒரே களியாட்டம். இப்பொங்கல்விழா சமயவிழாவாக மட்டும் அமையாது வாணிபச் சந்தையாகவும் அமையும். பாலர் முதல் முதியோர்வரை பல பொருட்களை வாங்குவதற்காக தம் மனதில் சீரிய திட்டங்களையெல்லாம் தீட்டி வைத்திருப்பர்.

பிற ஊர்களில் இருந்து வரும் பக்தர்களுக்குத் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் கோயில் நிர்வாகசபையினரால் ஒழுங்கு செய்து கொடுக்கப்படுகிறது. இக்கோயிலை தற்போது வன்னியின் இறுதிமன்னன் பண்டாரவன்னியன் மரபில் வந்தவர்களே கோயில் நிர்வாக வேலைகளைச் செய்து வருகிறார்கள்.

— —

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள் ... ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் பூங்காவன திருவிழா இன்று நடைபெற...

## திட்டமிடும் பிரிவுகள்

கோட்டை, ஞாயிறு ஏழுபிரதான அமைச்சுகளுக்கு திட்டமிடும் பிரிவுகள் நிறுவ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. காணி, விவசாய கைத்தொழில, உள்ளூராட்சி, பொதுவேலைப்பகுதி, தேசியமயசேவைகள் கலவி கலாச்சாரமாகிய அமைச்சுகளே இத்திட்டப்பிரிவுகளைப் பெறும் அமைச்சுகளாகும்.

இத்திட்டமிடும் பிரிவுகள் பிரஸ்தாப அமைச்சுகளின் நிரந்தரக் காரியதரிசிகளின் கீழ் செயலபடுமென அறிவிக்கப்பட்டுள்ளது. திட்டமிடும் பகுதிகளுக்கு அதிபர்கள் உதவியதிபர்கள். பதிலதிபர்கள் ஆகியோரைத் தெரிவுசெய்வதற்கு அரசாங்க சேவையிலுள்ள அதிகாரிகள், கூட்டு ஸ்தாபனங்களிலுள்ள அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து பொது சேவை ஆணைக்குழு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

—

## சோமசுந்தரத் தம்பிரான் வருகை

யாழ்ப்பாணம், திங்கள் நாவலர்சிலை திறப்புவிழாவில கலந்துகொள்ள மதுரை சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் இம்மாதம் 29-ம் திகதி காலை யாழ்ப்பாணம் வருகிறார் விமானத்தில் பலாலி விமானநிலையத்தை வந்தடையும் இவருடன் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளும் வருகிறார்.

இவர் திருக்கோணமலை, மட்டக்களப்பு, நாவலப்பிட்டி, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 10 நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

———

## சிங்களமும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் படிப்பித்த ஆசிரியர் திரு. ரி. துரைராசாவும் கடுகண்ணாவை பாடசாலை ஆசிரியர் கே. ஸ்டீபன் ஆகிய இருவர்களுமே இங்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களாவர். இவர்களில் ஒருவர் சிங்கள ஆசிரியராவார். கடுகண்ணாவையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட திரு. ஸ்டீபன் சிங்கள ஆசிரியராவர்.

# ஒரு புதியகண்டுபிடிப்பு

தமிழர் சிங்களவரா, சிங்களவர் தமிழரா, என்ற ஓர் ஆராய்ச்சி இப்பொழுது இலங்கையில் நடந்துவருகிறது. இதற்கு மூலபுருஷர் இலங்கையின் புதைபொருள் ஆராய்ச்சித் தலைவராக இருந்து ஓய்வுபெற்ற டாக்டர் கொடகும்பறை என்பவர்.

சில நாட்களுக்கு முன்பு இவர் ஒரு மகா அற்புதமான கண்டுபிடிப்பை வெளியிட்டார். அதை ஆங்கில பத்திரிகைகள் எல்லாம் பிரசுரித்தன. இலங்கையில் வாழும் தமிழ 'ஹரிஜனங்கள்' மட்டுமல்ல் மேல் சாதி என்று கூறிக்கொள்ளும் தமிழர்களுமே முழுச்சிங்களவர்கள்தான், என்பதே அவருடைய கண்டுபிடிப்பு. புதைபொருள் ஆராய்ச்சி லைவராயிருந்தவரல்லவா? ஆகையால் அவர் கூறுவதற்கு மதிப்புக்கொடுக்க வேண்டியது நமது கடமை. ஆனால் மேலெழுந்தவாரியான இந்த கூற்றுக்கு அவர் பொறுப்பான ஆதாரம் எதுவும் கொடுக்கத் தவறிவிட்டார்

சரித்திர வரலாற்றைக் கூறும் மகாவம்சமே இதை ஒப்புக்கொள்ளும். ஏன், டாக்டர் கொடகும்பறையே இதனை இதற்கு முன்பு எழுதிய கட்டுரைகள் பலவற்றில் ஒப்புக்கொண்டிருக்கிறார். இவருடைய குருவாகிய முன்னாள்புதைபொருள் ஆராய்ச்சித்தலைவரும், புத்தபகவான் இலங்கைக்கு விஜயம் செய்தது பற்றி சந்தேகம் தெரிவித்தவருமாகிய டாக்டர் பறனவித்தாரனையும் சமூக, அரசியல் விஷயங்களில் இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்ததென்று பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

கொழும்பிலோ கண்டியிலோ ஒரு 'சைவர்' கடைக்குள் நுழைந்து அங்கே தோசையையும் இடியப்பத்தையும் மசாலை வடையையும் ருசி பார்க்கும் சிங்களவரையும் தமிழரையும் நோக்கும் பாரபட்சமற்ற ஒருவர் அவர்களிடையே காணப்படும் முகத்தோற்றத்தின் ஒற்றுமையையும்,

## நாட்டிலும் நகரிலும்

அவர் கூறிய கருத்தைத் தமிழர்கள் ஆட்சேபிப்பது எதிர்பார்க்கவேண்டியதே. ஆனால் சரித்திரம் அறிந்த சில சிங்களவரும் அதுகொஞ்சம் எட்டிப்போய்விட்டதென்று கருத்துப்பட பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார்கள். டாக்டர் கொடகும்பறை தாம் கற்ற சரித்திரத்தையேமறந்துவிட்டாரா அல்லது ஓய்வுபெற்ற புதைபொருள் ஆராய்ச்சித்தலைவர் என்றமுறையில் பழைய சரித்திரங்களுக்கு மாறான புதிய கருத்துக்களை தெரிவிக்கவேண்டுமென்பதுதமது கடமைஎன்று நினைத்தாரோ என்றும் சிலர் சந்தேகம் தெரிவித்துள்ளார்கள்.

தமிழர் சிங்களவர் கலப்பு இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே நடந்துவந்திருக்கிறதென்றும், சிங்களவருடைய மொழி, இலக்கியம், கலை, உணவு, உடை யாவற்றையும் பாதித்துள்ளதென்று சிங்கள சரித்திராசிரியர்களாகிய டாக்டர் ஜி. சி. மென்டிஸ், டாக்டர் போல் பீரிஸ் முதலியோரும் போத்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கில சரித்திராசிரியர்களும் கூறியிருக்கையில் டாக்டர் கொடகும்பறை இப்படிக் கூறுவது பலருக்கு...

அவர்கள் பேசும் பேச்சிலுள்ள மொழி ஒற்றுமையையும் அவதானித்துவிட்டு டாக்டர் கொடகும்பறை வெறும் 'கப்ஸா' விடுகிறாரென்று நிச்சயமாகக் கூறுவார்கள். எக்காரணம்பற்றி அவர் இப்படி ஓர் அடாண்டமான வெடிப்புளுகை அவிழ்த்துவிட்டார் என்று அவர்கள் ஆச்சரியப்படுவார்கள் என்பது நிச்சயம்.

டாக்ட அவர்களுடைய சித்தாந்தத்துக்குப் பதில் அளிக்குமுகமாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் ஒரு தமிழர் எழுதிய கடிதம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. 'ஐயா, டாக்டர் கொடகும்பறையின் கருத்தைத்தயவுசெய்து இலங்கை முழுவதிலும் பறைசாற்றவும். தென்னிலங்கை மக்கள் அதைப் படித்தார்களானால் இனிமேல் இனக் கலவரங்கள் உண்டாகாது' என்று அந்தத் தமிழர் கேட்கிறார்.

உண்மைதானே! தமிழர் சிங்களவரா, சிங்களவர் தமிழரா என்று மண்டையைப் போட்டு உடைக்காமல் எல்லோரும் இலங்கையர் என்று கூறிக்கொண்டிருப்பது புத்திசாலித்தனமல்லவா?

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென நம்பலாம். ஐக்கிய அரசுக் குடியரசுக்குப் பல பிரச்னைகள் இருக்கின்றன. இப்பிரச்னைகளுக் கிடையிலும் அந்தநாடு பலதுறைகளிலும் முன்னேற்றமடைந்து வருகிறது. வெளியாரி பிரச்னையே இல்லாத இலங்கையில் சிலர் அரசியல் ஆதாயத்துக்காக கற்பனை செய்யும் வெளி எதிரிகளைவிட்டு இலங்கையின் ஐக்கியத்தை நிலைநாட்டிஞல் கிடைக்காமல் போகாதென்று கூறலாம். ஏனைய சர்வதேச அமைதிக்கும் சர்வதேசப் பிரச்னைகளுக்கும் தீர்வுகாண்பதில் இலங்கை ஆற்றக்கூடிய பணிகள் நிறைய இருந்தாலும் உள் நாட்டில் பிரச்னைகள் பெரிது படாமலும் அமைதி குலையாமலும் இருந்தால்தான் சர்வதேச விவகாரத்தில் இலங்கையின் குரலுக்கு மதிப்பிருக்கமுடியும்.

# யாழ். நவீனசந்தை பற்றி ஒப்பந்தகாரர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நவீன சந்தைக் கட்டட ஒப்பந்தம் செய்திருக்கும் கொழும்பு 'மைமர்' ஸ்தாபனத்தால் முதலில் 8,00,000 ரூபாய் பெறுமதியான ஒப்பந்தங்கள் செய்ய பதிவுசெய்யப்பட்டதாகவும், இதன் பின்னர் இதே பதிவுடன் 'தெண்டிப்புக் கடிதத்தின்' பிரகாரம் 15,00,000 ரூபாவுக்குக் குறைவான வேலைகளைச்செய்யவும் தாம்கருதியுடையவர்களானதாகவும் மேற்படி ஸ்தாபன அதிபரான திரு. கோபாலபிள்ளை மகாதேவா 'ஈழநாடு' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நவீன சந்தைக் கட்டட ஒப்பந்தம் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

'மார்க்கட் ஒப்பந்தத்தை நாம் கேட்டபோது யாழ்ப்பாண நகர ஆணையாளரின் முடிவைப் பின்பற்றி 10,00,000 ரூபாவுக்குப் பதிவு பெறுபவர்களுக்குக் கேள்விப் பத்திரங்கள் கொடுக்க முடியாதென்றும், நாங்கள் மேற்படி வேலையைக் கேட்க விருப்பமானுல் 10,00,000 ரூபாவுக்குப் பதிவு பெற்றுவரும்படியும் எந்திரிகள் கூறினர். 8,00,000 ரூபாவுக்குப் பதிவுப் புத்தகம் பெற்றவர்களில் தகுதியுடையவர்களுக்கு 15,00,000 ரூபாவுக்குத் தற்காலிக தெண்டிப்புக் கடிதம் கொடுத்து அந்தத் தொகைக்குட்பட்ட ஒரு வேலையில் அவர்களுடைய கூடிய தகுதியைக் காட்டி முன்னேற வழிசெய்வது பிரசித்த வேலைப் பகுதியின் வழக்கம். இதன்படி எங்கள் கோரிக்கையை ஆராய்ந்து, தகுதியை மதிப்பிட்டு 15,00,000 ரூபாவுக்குத் தெண்டிப்புக் கடிதம் வழங்கினர்.

இப்படிக்கடிதங்கள் சாதாரணமாக எல்லா அரசாங்கப் பகுதிகளிலும், கூட்டுஸ்தாபனங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படுவதுவழக்கம் என்றும் இதன் பிரகாரமே தாங்கள் மார்க்கட் கட்டட ஒப்பந்தத்திற்கு 13,98,449 ரூபாவுக்கு கேள்வி அனுப்பியதாகவும் திரு. மகாதேவா மேலும் தெரிவித்தார்.

(கா. நி)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்குமுன் பார்வதி அம்மாளால் கோண்டாவில் செங்கப்பணியில் நிறுவப்பட்ட புவனேஸ்வரி அம்பாள் சமேத அதிபதீஸ்வரன் ஆலயம் கற்கோவிலாக புதுப்பிக்கப்பட்டு அதன் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

## வெந்நீருக்கு 10 சதம்

புலோலி, ஞாயிறு

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்துசிகிச்சைபெறும் நோயாளர்கள் வெந்நீர் இல்லாது பெரும் கஷ்டப்படுகின்றனர். இதஞல் நோயாளிகள் வெளியிலுள்ள தேநீர்க் கடைகளில் ஒருகிளாஸ் வெந்நீர் 10சதம் கொடுத்து வாங்குகின்றனர்:

## 'மாவோ' ஜுரம்

புலோலி, ஞாயிறு

புலோலிப் பகுதியில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக 'மாவோ' என்னும் காய்ச்சல் மக்களைப் படுக்கைகளில் போட்டுள்ளது இதனுல் நூற்றுக் கணக்கானோர் வைத்தியநிலையங்களில்தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

எனவும் ஒரு கதை நிலவுகிறது. அதற்கிணங்கவே தான் ஒவ்வொரு ஆண்டிலும் வைகாசியில் வரும் பௌர்ணமிக்கு அண்மையில் வரும் திங்களில அம்பாளுக்குப் பொங்கல் விழா நடத்தி வருகிறுர்கள்.

வைகாசித் திங்கள் பௌர்ணமியிலன்று நடக்கும் பொங்கலுக்கு ஒரு கிழமைக்கு முன் பண்டு தொட்டுப் பண்டாரவன்னியன் பரம்பரையினரால் போற்றி வழிபட்டு வரும் முள்ளியவளை காட்டு விநா பெற்று கருமத்தைச் சாதித்து வெற்றிமேல் வெற்றி பெற்றனர் என்பர்.

வட மாகாணத்தில் உள்ள பெயர்பெற்ற கோவில்களின் வரிசையில் மூன்ருவது இடத்தை வகிக்கும் இக் கோவில் சாதிப்பிரச்னையையே கண்டிருக்க மாட்டாது. சாதிப் பிரச்னை என்று ஆரம்பிக்கப் பட்டதோ அன்றே பகிரங்கமாக எல்லாச் சாதியினரும் தங்குதடையின்றிச் சென்று தரிசனம் செய்யலாம், செய்ய வேண்டும் என்னும் பெரு நோக்

## இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் பூங்காவன திருவிழா இன்று நடைபெறவிருக்கிறது. இத்திருவிழாவையொட்டி 12 ஜோடி மேளக்கச்சேரி, வில்லிசை, மெல்லிசை, மற்றும்சீனடி சிலம்படி நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

[இன்று திருஞானசம்பந்த மூர்த்திநாயஞர் குருபூசை இதனை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது]

# இறைவன் அவதாரம் ஞானசம்பந்தர்

— தமிழ்பிரியை —

உமை அம்மையின் ஞானப்பாலை உண்ட சம்பந்தர் மெய்ஞ்ஞானம் உணரப் பெற்ருர். அந்நிலைக்குக் கொண்டுவர அருந்தவம் செய்தவர் பகவதியார். எனவே தாய்மார்கள் தவமிருந்து பெற்ருர்களாயின் அப்பிள்ளைகள் யாவரும் ஞானசம்பந்தர்களாக வளர்வார்கள். அவர் செய்தது அருந்தவம். இறைவனையே தம் வயிற்றிலடக்கிய பெருமை அவர்தம் பக்குவ நிலையை உணர்த்துகின்றது. பிள்ளையாரே ஆளுடைய பிள்ளையாராக மண்ணில் தோன்றிஞர். மனித உருவத்திலே நின்று ஐந்தொழிலை நடாத்திஞர்.

**பூம்பாவையைப் படைத்தல்**

விடத்திஞல் தீண்டப்பட்டு இறந்த பூம்பாவை என்ற பெண்ணைத் தந்தையாகிய சிவநேசர் அவளுடைய எலும்பு, சாம்பல் முதலியவற்றை ஒரு குடத்துளிட்டு வைத்திருந்தர்ர். அவ்வெலும்புக்கு உயிர் கொடுத்தருளிஞர் சம்பந்தர். பூம்பாவை உயிர்பெற்று எழுந்தனள். சிவநேசர் ஞானசம்பந்தரை நோக்கிப் பூம்பாவையைத் திருமணம்செய்து கொள்ளும்படி வேண்டிஞர். தம்மால் படைக்கப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள மறுத்தார் பிள்ளையார். இதைத் தம் வாயாலேயே கூறுகிருர்.

''கற்றவார் சடையவர்
கருணைகாண்வர
உற்பவிப்பித்தலால் உரை
தகாது''

எனக் கூறுகிருர்.

**காத்தல்**

''சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும்
பாங்கினில ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்
ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்தாம்
உணர்ந்தார் அந்
நிலையில்''

உணர்வரிய மெய்ஞ்ஞானம் சிவஞானம் என்பதனை உணர்ந்து அதனைக் காத்து நின்ருர். சைவ சமயமும், அறமும் சமணர்களால் அழிந்துவிடாமல் காத்தார். திருநீற்றின் மகிமையை உணர்ந்து அதனை மேலோங்கச்செய்தார். தந்தையார் வள்வி செய்வதற்கு இறைவனிடமிருந்து பொன்னைப் பெற்றுக்கொடுத்தார். அதஞல் தர்மம் நீடித்து நிலை பெற்றது.

**அழித்தல்-'ஆழ்கதீயதெல்லாம்'**

தீயவை யாவும் அழிந்து போகட்டும். தீய செயல்கள் தீய எண்ணங்கள் எல்லாம் அழிந்துபோகட்டும் எனச் சபித்தார், ஏட்டிலே எழுதி ஆற்றிலே இட்டார், தீமைகள் யாவையும் ஒன்றுதிரட்டித் தூர வீசியதுபோல. மக்கள் வாழ்க்கைக்கு முட்டுக்கட்டையாக நிற்கும் தீமைகளின் உக்கிரத்தை அழித்தார். சமணர்களோடு வாதிட்டு உண்மையை நிலைநாட்டியதுடன் அரசனது அறியாமையை அழித்தார். கொல்லிமழவனின் புதல்விக்கு ஏற்பட்ட முயலகன் என்னும் நோயை அறவே அழித்தார்.

**அருளல்**

சம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துவிட்டு, திருக்கொடிமாடச் செங்குன்றூரில் வந்திருந்தார். அக்காலை அங்குள்ள மக்கள் யாவரும் பனியாலும், குளிராலும் மிக நடுங்கிஞர்கள். மக்கள் நிலைகண்டு அருள் கூர்ந்து இறைவனைப் பணிந்து 'அவ்வினைக் கிவ்வினை' என்றெடுத்து 'எவ்விடத்தும் அடியார் இடர்காப்பது காண்டம்' எனச் செப்பலும், ஆய குறிப்பினில் ஆணை நிகழ அருளிச்செய்தார். இந்நிகழ்ச்சி அவரது அருட்திறத்தை விளக்குகிறது. அம்மட்டுமல்ல 'வேந்தனும் ஓங்குக' என அருளிஞர்.

அதஞல் கூன்பாண்டியனது கூன் நிமிர்ந்தது. திருவீழிமிழலையில் மக்கள் பசி கண்டு மனம் பொருராய் இறைவனைத் தொழுது படிக்காசு பெற்று மக்கள் பசியைப் போக்கிஞர்.

**மறைதல்**

பிள்ளையார் பாண்டி நாட்டுக்கு வந்திருந்தபோது —அவர் வருகையை அறிந்த வஞ்சமனங் கொண்ட சமணர்கள் அவருடையதிருமடத்துக்குத் தீ வைத்தனர். உண்மையை உணர்ந்த சம்பந்தர் ''செய்யனே திருவாலவாய்'' எனத் தொடங்கிப் 'பையவே சென்று பாண்டியர்க்காகவே' என்றதஞல் அத்தீ அரசனை அடைந்து பாண்டியனுக்கு வெப்பு நோயை உண்டுபண்ணியது. சம்பந்தர் தம்மை எத்துன்பமும் வந்து அணுகவிடாமல் அதைமாற்றும் பெற்றியைப் பிரானிடமிருந்து பெற்றிருந்தார். அத்திருவுருவைச் சேக்கிழார் சுவாமிகள்,

'ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்
[துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்
[கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்
[தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக்கண்டார்கள்'

எனப்பாடுகிருர்,

மாதவத்தின் கொழுந்தனையார் சுற்றமுறு பெரும் பாசத்தொடர்ச்சி விடு நிலைமை உடையராயிருந்தும், அந்தணர்க்குரிய இருபிறப்பொழுக்கம் வாழவும் —சிவசக்தியின் உண்மையினை உலகிற்குணர்த்தவும் திருமணம் செய்த அன்றே தம் காதலியோடும் சுற்றத்தோடும் நெருப்பிற் புகுந்து மறைந்தருளிஞர்.

வும் கடுகண்ணுவை பாடசாலை ஆசிரியர் கே. ஸ்டீபன் ஆகிய இருவர்களுமே இங்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களாவர். இவர்களில் ஒருவர் சிங்கள ஆசிரியராவார். கடுகண்ணுவையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட திரு. ஸ்டீபன் சிங்கள ஆசிரியராவர்.

பாடசாலை பொறுப்பேற்பு வைபவம் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. பொறுப்பேற்பு வைபவத்தின்போது 75ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல் காத்தனர். காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரிண்டன் திரு. என். எம். டி. சில்வா தலைமையில் இந்தப் பொலிசார் கடமை புரிந்தனர்

## சிங்களத்தை..

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

செனட்டர் சு. நடராசா பேசும்போது, பௌத்தர்களாக மாறும் சிறுபான்மைத் தமிழர்கள் வடபகுதியில்தான் வாழவேண்டியிருப்பதால், பாகுபாடுகள் இதன் மூலம் ஒழியுமெனக் கருதுவது தவறென்றும் சிங்களப் பட்டதாரிகள் ஆயிரக்கணக்கில் வேலையற்றிருக்கும்போது இவர்களுக்கு வேலை கிடைக்குமென்று எதிர்பார்ப்பது தவறென்றும் கூறிஞர்.

ஆசிரியர் ச. மகேசன் பேசும்போது, மூன்று பாடசாலைகளில் சிங்களத்தைப் போதனுமொழியாக ஏற்றுக் கொண்டால், இதனைப் பின்பற்றி 10 லட்சம் இந்தியத் தமிழர்களும் சிங்களத்தைப் போதனுமொழியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை உருவாகுமென்றும் கூறிஞர்.

புரட்சிவாத சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த வி. எம் பொன்னையா பேசும்போது, இப்பாடசாலைகளில் சிங்களத்தை ஒரு பாடமாகப் போதிக்கலாமென்றும், சிங்களத்தைப் போதனுமொழியாக்கக்கூடாதென்றும் கூறிஞர்.

ஈழத் தமிழர் இளைஞர் இயக்கத் தலைவர் திரு. இலங்கை மன்னன் பேசும்போது, போராட்டத்திற்கு இளைஞர்கள் தயாராக இருப்பதாகவும்,சிங்களம்போதனுமொழியாக்கப்பட்டால் அதனை எதிர்ப்போம் என்றும் கூறிஞர்.

## விற்பனைக்கு

கந்தர்மடத்தில் 1 3/4 பரப்பு வளவும் வீடும் சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்:- பொ. நா. நடராசா நொத்தாரிஸ், இல: 10, இந்து மகளிர் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

1165

தென்று சிங்கள சரித்திராசிரியர்களாகிய டாக்டர் ஜி. சி. மெண்டிஸ், டாக்டர் போல் பீரிஸ் முதலியோரும் போத்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கில சரித்திராசிரியர்களும் கூறியிருக்கையில் டாக்டர் கொடகும்பறை இப்படிக் கூறுவது பலருக்கு ஆச்சரியத்தைக்கொடுத்துள்ளது. சிங்களவருடைய என்று அந்தத் தமிழர் கேட்கிறுர்.

உண்மைதானே! தமிழர் சிங்களவரா,சிங்களவர் தமிழரா என்று மண்டையைப் போட்டு உடைக்காமல் எல்லோரும் இலங்கையர் என்று கூறிக்கொண்டிருப்பது புத்திசாலித்தனமல்லவா?

— வழிப்போக்கன்

# 'சமய, கலாச்சாரத்தில் மாற்றம் ஏற்படுகிறது'

கோப்பாய், ஞாயிறு

''மக்கள் மத்தியிலே சேர்ந்து வாழும் தன்மை ஏற்பட்டாலன்றி சனசமூக நிலையங்களிஞல் பயனேற்பட முடியாது. மக்கள் அனைவரும் சேர்ந்து வாழ்வதே சமூகத்தின்அடிப்படை இலட்சியம். சமூகத்தின் பண்பு ஒற்றுமை என்பதனை மக்கள் சிந்தித்து கட்சி, சமயம், சாதிவேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு வாழமுற்பட வேண்டும்.'' என்று கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையப் புதிய கட்டடத் திறப்புவிழாவில் கலந்து உரையாற்றுகையில் கோப்பாய் எம்.பி. திரு. எஸ் கதிரவேலுப் பிள்ளை கூறிஞர்.

நிலையத்தலைவர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் புதிய கட்டடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்து உரை நிகழ்த்துகையில், ''நமது சமய, கலாச்சாரத்தில் பெரியதொரு மாற்றம் ஏற்பட்டுவருவது அவதானிக்கத்தக்கது. அதேபோல நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், அரசாங்கம் தேவையான அளவு உதவி வருகின்றது. தற்போது பொருளாதாரத் துறையில் ஒரு மாற்றம், முன்னேற்றம், சீர்திருத்தம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆகவே அரசாங்கத்தின் இவ் வுதவியை நல்லமுறையில் பயன்படுத்தி உணவுற்பத்தியைப் பெருக்குவதிலும் சமயத்துறையை முன்னேற்றுவதிலும், சனசமூக நிலையங்கள் ஒருமித்து முன்வர வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

வலிகிழக்கு காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளைகோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. என். ஜே. தர்மபாலா உட்பட பலர் பேசினர்.

இறுதியில் அடங்காப்பிடாரி சமூகநாடகமும் மேடையேற்றப்பட்டது.

# 1 கோடி கலன் குடிவகை தயாரிக்கும் நிலையம்

கோட்டை, ஞாயிறு

உடவளவ பலநோக்குத் திட்டத்தின்கீழ் வருடமொன்றிற்கு ஒரு கோடி கலன் குடிவகை தயாரிக்கக் கூடிய மதுபான வடிசாலை ஒன்றை நிறுவ அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

உடவளவ சீனித்தொழிற்சாலை தினமும் 2750 தொன் கரும்பைச் சாருக்குவதில் ஈடுபட்டுள்ளது. இது 3,250 தொன் ஆக அதிகரிக்கப் படவுள்ளது, இவைமட்டுமன்றி இந்த உடவள்வ அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நூல்நூற்றத் தொழிற்சாலை, பழங்கள் பதனிட்டுத் தகரத்தில் அடைக்கும் தொழிற்சாலை. மரம் அரியும் தொழிற்சாலை. ஓடு உற்பத்தித்தொழிற்சாலை. ஆகியன நிறுவப்படவிருப்பதோடு வேறு பல குடிசைக் கைத் தொழில்களும் நிறுவப்படவுள்ளன.

இவற்றைவிடப் பெரியதொரு இளைஞர் குடியேற்றத்திட்டமொன்றும் இத்திட்டத்தின்கீழ் நிறுவப்படவுள்ளது. பயிற்சிபெற்ற 250 விவசாயிகள் உப உணவுச் செய்கையில் ஈடுபட 1060 ஏக்கர் மேட்டுநிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1000 இளைஞர்களை ஒவ்வொருவருடமும் குடியேற்றத்தக்க வகையில் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும்.

## இடமாற்றம்

உடுவில், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் எழுதுவினைஞராக கடமையாற்றும் திரு. செல்வரத்தினம் ஜூன் மாதம் முதல் சிலாபம் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு எழுதுவினைஞராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் மெமோரியல் கல்லூரி ஆசிரியை திருமதி. கே. இராசமணி ஜூன் மாதம் முதல் கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஜூன் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org